Registered as a Newspaper
பக்கங்கள் - 12
விலை - ரூபா 50

# உதயன்




"எல்லாரும் இப்பிடி அறிக்கையள் மட்டும் விடுகினம் ஆனா உருப்படியா ஒண்டும் நடக்குதில்லையே..."

சுடர் : 39
கதிர் : 177

செவ்வாய்க்கிழமை
21 மே 2024

வைகாசி 08 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055




## ஹெலிகொப்டர் விபத்தில் ஈரான் ஜனாதிபதி இறப்பு

*மத்திய கிழக்கில் துக்கம்*

தெஹ்ரான், மே 21
ஈரானின் ஜனாதிபதி இப்ரா ஹிம் ரைசி, ஹெலிகொப்டர்

11

## இலங்கையை சர்வதேச நீதிமன்றில் நிறுத்த வேண்டும்!



*மன்னிப்புச் சபையின் செயலாளர் அக்னஸ் வலியுறுத்தல்*

கொழும்பு, மே 21
இலங்கை தொடர்பான விவகாரங்களை ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபைக்கும், சர்வதேச நீதி மன்றத்துக்கும் கொண்டு செல்லவேண்டும் என்று சர்வதேச மன்னிப்புச்சபையின் செயலாளர் நாயகம் அக்னஸ் தெரிவித்துள்ளார்.

11

## போர்க்குற்றவாளிகளைத் தண்டிக்க அனைவருமே தவறிவிட்டனர்!

*மன்னிப்புச் சபையின் செயலாளர் அறிக்கை*

லண்டன், மே 21
இலங்கையில் மாறி மாறி ஆட்சி செய்த அரசாங்கங்கள், மதஸ்தாபனங்கள், ஊடகங்கள், அதிகாரிகள் என அனைவருமே போர்க்குற்றமிழைத்தவர்களுக்கான தண்டனையைப்

11

## ஈரானின் புதிய அதிபராக மொக்பர் நியமனம்

தெஹ்ரான், மே 21
ஈரானின் ஜனாதிபதி ரைசி, ஹெலிகொப்டர் விபத்தில் இறந்ததையடுத்து, துணை ஜனாதிபதியாக இருந்த மொக்பர், புதிய ஜனாதிபதியாக அறி

11



## இராணுவ வாகனம் மோதி இளம் பெண் உயிரிழப்பு

*பிறந்தநாளில் நடந்த துயரம்*

யாழ்ப்பாணம், மே 21
யாழ்ப்பாணம், புத்தூரில் இராணுவ வாகனம் மோதியதில் 23 வயது யுவதி ஒருவர் உயிரி

11

## முள்ளிவாய்க்காலில் அக்னஸ் அரசின் கையாலாகாத்தனமே!

*கதறுகின்றார் கம்மன்பில*

கொழும்பு, மே 21
சர்வதேச மன்னிப்புச் சபையின் செயலாளர் நாயகம், முள்ளிவாய்க்கால் சென்று புலிகளின் நினைவேந்தல் நிகழ்வில் பங்கேற்றுள்ளார். வெளிநாட்டவர் ஒருவர் இங்கு வந்து இராணுவத்தினரைக் கொன்ற

11



## ஐ.எஸ். பயங்கரவாதிகளென நான்கு இலங்கையர்கள் இந்தியாவில் கைது!

11

## வற்றாப்பளைக்குச் சென்ற உழவியந்திரம் கவிழ்ந்து 16 வயதுச் சிறுவன் பலி!

புதுக்குடியிருப்பு, மே 21
வற்றாப்பளை கண்ணகியம்மனின் பொங்கலுக்காகச் சென்று கொண்டிருந்த உழவியந்

11

## சக்திமிகு கடவுச்சீட்டு இலங்கை முன்னேற்றம்!


கொழும்பு, மே 21
2024ஆம் ஆண்டின் முதல் காலாண்டில், சக்தி மிக்க கடவுச் சீட்டுகளின் பட்டியலில்

11

## வற்றாப்பளைக் கண்ணகிக்கு நேற்று வைகாசிப் பொங்கல்

முல்லைத்தீவு, மே 21
உப்பு நீரில் விளக்கெரியும் அற்புதங்கள் நிறைந்ததும், வரலாற்றுச் சிறப்புமிக்கதுமான முல்லைத்தீவு வற்றாப்பளைக் கண்ணகி அம்மன் ஆலய வருடாந்த வைகாசிப் பொங்கல் உற்சவம் நேற்

11



றைனோ சிமென்ட் ரூப்பிங் ஷீட்
சிறந்த விலைக்கு நீண்ட காலம் பாவிக்கக்கூடிய கூரை
ரூ. 3,955/- இலிருந்து துரித அழைப்பு 0115748728
• இலங்கையின் முதற்தர ரூப்பிங் மற்றும் சீலிங் ஷீட் • 60 வருட நம்பிக்கை
RHINO
60 YEARS
www.rhino.lk


மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெண்ணின் சடலம் மீட்பு

கொழும்பு, மே 21

தலவாக்கலை மேல் கொத்மலை நீர்த்தேக்கத்தில் மிதந்த நிலையில் பெண் ஒருவரின் சடலம் ஒன்றை தலவாக்கலை பொலிஸார் நேற்றுமுன்தினம் மாலை மீட்டுள்ளனர்.

சடலமாக மீட்கப்பட்டவர் 18 வயதுடைய பெண் எனவும் இவர் லிந்துலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பாமஸ்டன் ரத்தினகிரியை சேர்ந்த பெரியசாமி திலிஷினா என அடையாளம் காணப்பட்டுள்ளார் என்றும் தலவாக்கலை பொலிஸார் தெரிவித்தனர். (எ-இ)

# எந்தத் தேர்தலானாலும் தே.ம.சக்தி சந்திக்கும்!



## அநுரகுமார தெரிவிப்பு

கொழும்பு, மே 21

**எந்தத் தேர்தலையும் சந்திக்கத் தயார். எந்தத் தேர்தலை முதலில் நடத்தவேண்டும் என்று பொதுஜன பெரமுன தீர்மானிக்குமாயின் தேர்தல்கள் ஆணைக்குழு எதற்கு?**

- இவ்வாறு தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க கேள்வி எழுப்பியுள்ளார்.

நேற்றுமுன்தினம் மஹரகம பகுதியில் நடந்த நிகழ்வொன்றில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

நாடாளுமன்றத்தைக் கலைக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு உண்டு. அதேபோல் எதிர்வரும் செப்ரெம்பர் மற்றும் ஒக்ரோபர் மாதமளவில் ஜனாதிபதித் தேர்தலை நடத்தும் அதிகாரம் தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு உண்டு. ஆகவே இரு தேர்தல்களும் நிச்சயம் வெகுவிரைவில் நடைபெறும்.

நாடாளுமன்றம் எப்போது கலைக்கப்படும் என்பது தற்போதைய பிரதான பேசுபொருளாகக் காணப்படுகிறது.

ஜனாதிபதி ரணில்விக்கிரமசிங்கவுக்கும், பொருளாதார பாதிப்புக்கு பொறுப்புக் கூற வேண்டிய பசில் ராஜபக்சவுக்கும் இடையில் தொடர்ச்சியாகப் பேச்சுகள் இடம்பெறுகின்றன.

நாடாளுமன்றத்தைக் கலைக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு உண்டு.

பதவிக் காலம் நிறைவடையும்வரை பதவியில் இருக்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முயற்சிப்பாரே தவிர பதவிக் காலத்தை வரையறுத்துக்கொள்ளமாட்டார். நாடாளுமன்றத்தைக் கலைப்பது ஜனாதிபதிக்கு சாதகமாக அமையாது - என்றார். (எ-இ)

## ஹர்ஷதான் நிதியமைச்சர்

கொழும்பு, மே 21

எனது ஆட்சியில் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வாவை நிதியமைச்சராக நியமிக்கப்போவதாக சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார். காலியில் நடைபெற்ற கூட்டமொன்றில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

சஜித் பிரேமதாஸ இவ்வாறு அறிவித்த சில நிமிடங்களில் ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர் ரெஹான் ஜெயவிக்கிரம, தேர்தலுக்கு இன்னும் கொஞ்ச நாள்தான் இருக்கிறது. அதுவரை பொறுமையாக இருங்கள். அதன் பின்னர் உங்களது உணர்வுகளை வெளிப்படுத்துங்கள் எனக் குறிப்பிட்டுள்ளார். (ஒ-6)



# தமிழ்த் தரப்புகளுடன் கைகோர்க்கத் தயார்

## புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே 21

தமிழ்மக்களுடைய அடிப்படை உரிமைகளைத் தேசிய இன ஒடுக்குமுறையின் அடிப்படையில் வென்றெடுக்கத் தயாராகவுள்ள தமிழ்த்தரப்புகளுடன் கைகோர்த்து முன்செல்ல நாம் தயாராகவிருக்கின்றோம்.

-இவ்வாறு புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் பொதுச் செயலாளரும், மூத்த பொதுவுடைமைவாதியுமான சி.கா.செந்திவேல் தெரிவித்தார்.

புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் ஏற்பாட்டில், முள்ளிவாய்க்கால் 15 ஆவது ஆண்டு நினைவஞ்சலி நிகழ்வு கொக்குவிலில் அமைந்துள்ள கட்சியின் வடபிராந்தியப் பணிமனையில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. அதில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வடக்கு - கிழக்கில் ஒடுக்கப்படும் தமிழ் மற்றும் முஸ்லிம் தேசிய இனங்களும், மலையகத்தில் 200 வருடங்களுக்கும் மேலாக வாழ்ந்து வருகின்ற மலையகத் தமிழரும் அடிப்படையில் சிங்கள-பௌத்த பேரினவாதத்தால் ஒடுக்கப்படுகின்றனர்.

காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பாகவும், எஞ்சியிருக்கும் தமிழ் அரசியல் கைதிகள் தொடர்பாகவும் சரியானதொரு தீர்வைச் சொல்லாமலும், அடிப்படையில் ஓர் அரசியல் தீர்வைக் கொண்டுவரக் கூடிய நிகழ்ச்சிநிரலைக் கொண்டுவராமலும் இன்னொரு ஆட்சி மாற்றத்துக்கு சிங்கள - பௌத்த பேரினவாதத் தலைமைகள் தயாராகின்றன.

தமிழ்த்தரப்புகளுடன் கைகோர்த்து முன்செல்ல நாம் தயாராகவிருக்கின்றோம் - என்றார். (எ-25-66)

## இலங்கையின் தவளை இனம் இந்தியாவிலும்

இலங்கைக்கு மட்டுமே சொந்தமானது என இதுவரை நம்பப்பட்ட தங்க முதுகு தவளை இனம், இந்தியாவின் கிழக்குத் தொடர்ச்சி மலைகளில் தென்பட்டுள்ளது.

ஹைதராபாத்தில் உள்ள இந்திய விலங்கியல் ஆய்வு மையத்தின் தீபா ஜெய்ஸ்வால், ஆந்திரப் பிரதேசத்தில் உள்ள கவுண்டினியா வனவிலங்கு சரணாலயத்தில் இந்தத் தவளை இனம் கண்டுபிடிக்கப்பட்டதை உறுதிப்படுத்தியுள்ளார்.

சரணாலயத்தில் உள்ள கவுனிதிம்மேபல்லிலுள்ள ஒரு சிறிய குளத்தின் அருகே தங்க முதுகு தவளை இனங்காணப்பட்டுள்ளது. (எ-இ)

# இராணுவத்தை அழைக்கின்றார் சஜித்!

கொழும்பு, மே 21

பயங்கரவாதிகளிடமிருந்து நாட்டைக் காப்பாற்றியதைப் போன்று, திருடர்களிடம் இருந்து நாட்டைக் காப்பாற்ற இராணுவத்தினர் எம்மோடு ஒன்றிணைந்து கொள்ளவேண்டும் என்று அழைப்பு விடுத்துள்ளார் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ.

ஐக்கிய மக்கள் சக்தியின் இராணுவ மாநாட்டின் 6ஆம் கட்டம் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை மொனராகலையில் நடைபெற்றது. அதில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

நாட்டின் அரசியல் அதிகாரம் சரியான தலைமைத்துவத்தை வழங்கியிருந்தால், இராணுவத்தினரால் பயங்கரவாதத்தில் இருந்து பாதுகாத்துத் தரப்பட்ட எமது நாடு வளமான நாடாக மாறியிருக்கும். இப்போதும் நாட்டைக் காப்பாற்றும் பணி எம்முன் உள்ளது.

திருட்டு, ஊழல், மோசடி, கொள்ளை மற்றும் தேசிய சொத்துகள் மற்றும் வளங்களை வீணடிப்பதை இல்லாதொழிக்க இராணுவத்தினர் தலையிடவேண்டும். நாட்டைக் கட்டியெழுப்பும் மனிதாபிமானப் பணியில் பங்காளராகவேண்டும் என்று இராணுவத்தினரிடம் கோரிக்கை விடுக்கிறேன் - என்றார். (எ-இ)

## துப்பாக்கிச்சூடு சந்தேகநபர் கைது

கொழும்பு, மே 21

ஹொரணை, கிரேஸ்லேன்வத்தை பிரதேசத்தில் கடந்த 5 ஆம் திகதி வர்த்தகர் ஒருவர் சுட்டுக் கொலை செய்யப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான துப்பாக்கி தாரி களுத்துறை குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

களுத்துறை குற்றப்புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார். கொட்டாவ பிரதேசத்தில் உள்ள வாடகை வீடொன்றில் தற்காலிகமாகத் தங்கியிருந்த 31 வயதுடைய இராணுவத்திலிருந்து தப்பிச்சென்ற ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (எ-இ)

## ரைசியின் மறைவுக்கு ரணில் இரங்கல்

கொழும்பு, மே 21

ஈரானிய ஜனாதிபதி இப்ராஹிம் ரைசி, வெளியுறவு அமைச்சர் அமீர் அப்துல்லாஹியன் மற்றும் பிற மூத்த ஈரானிய அதிகாரிகளின் துயர மரணத்தால் இலங்கை ஆழ்ந்த அதிர்ச்சியும் வருத்தமும் அடைந்துள்ளது என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அவர்களை இழந்து வாடும் குடும்பத்தினருக்கும், ஈரான் அரசாங்கத்துக்கும், மக்களுக்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்களையும், ஆழ்ந்த இரங்கலையும் தெரிவித்துக் கொள்கிறேன். எங்களது பிரார்த்தனைகள் ஜனாதிபதி ரைசி மற்றும் அவரது பரிவாரங்களின் குடும்பத்தினருடன் இருக்கின்றன என்று அவர் தனது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஜனாதிபதித் தேர்தல் ஒக். 5 அல்லது 12

கொழும்பு, மே 21

**ஜனாதிபதித் தேர்தல் ஒக்ரோபர் 5ஆம் திகதி அல்லது 12ஆம் திகதியில் நடைபெறும் என தேர்தல் ஆணையாளர் நாயகம் சமன் சிறி ரத்நாயக்கா தெரிவித்துள்ளார்.**

ஜுலை 17ஆம் திகதிக்குப்பின்னர் தேர்தல் திகதி அறிவிக்கப்படுமெனவும் 16ஆம் திகதி முதல் 21ஆம் திகதி வரை நியமனப்பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படுமெனவும் அவர் தெரிவித்துள்ளார். 28 தொடக்கம் 42 நாள்கள் பரப்புரைக்கு வழங்கப்படுமெனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஒ-6)

## பாதுகாப்புப் பணியாளரும் போராட்டத்தில் இணைவு

கொழும்பு, மே 21

பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களின் பணிப்புறக்கணிப்பு போராட்டத்தில் பாதுகாப்பு ஊழியர்களும் இணைந்துள்ளனர்.

பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் இது குறித்து தெரிவிக்கையில், 2 ஆயிரத்து 500 ஏக்கர் நிலமும் கட்டடங்களும் பாதுகாப்பு ஊழியர்களின் கைகளில்தான் உள்ளன. மாணவர்களின் நன்மை கருதி பாதுகாப்பு ஊழியர்கள் சிந்தித்துச் செயற்படவேண்டும் என்று குறிப்பிட்டுள்ளன.

இதற்குப் பதிலளித்துள்ள கல்விசாரா ஊழியர்கள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டபோது ஏன் மாணவர்களைப்பற்றிச் சிந்திக்கவில்லை எனக் கேள்வி எழுப்பியுள்ளது. (ஒ-6)

## தொடரும் மழையால் நோய் நிலைமைகள்

கொழும்பு, மே 21

தொடரும் மழையால் வயிற்றுப்போக்கு நோய் அதிகரிக்கும் அபாயம் உள்ளது என்று பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் எச்சரித்துள்ளது.

எதிர்வரும் வெசாக் பண்டிகையை முன்னிட்டு நாடு பூராகவும் தானம் வழங்கும் நிகழ்வுகளில் சுத்தமான நீரைப் பயன்படுத்த வேண்டும் என்று பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹன குறிப்பிட்டுள்ளார். ஏனைய வருடங்களுடன் ஒப்பிடும் போது இந்த வருடம் தானம் வழங்குவதில் குறைபாடு காணப்படுகின்றது என்றும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் தெரிவித்துள்ளார். (எ-இ)

## பாடசாலைகள் நேற்று ஆரம்பம்

கொழும்பு, மே 21

கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைகள் நிறைவடைந்துள்ள நிலையில், முதலாம் தவணைக்கான மூன்றாம் கட்டக் கல்வி நடவடிக்கைகள் நேற்று ஆரம்பமாகின.

அதேவேளை, சீரற்ற காலநிலை காரணமாக புத்தளம் மாவட்டத்தில் உள்ள அனைத்துப் பாடசாலைகளுக்கும் நேற்று விடுமுறை வழங்கப்பட்டிருந்தது. (எ-இ)

## துப்பாக்கிச் சூடுகளில் வீழ்ச்சி

கடந்த இரு ஆண்டுகளுடன் ஒப்பிடும்போது இந்த ஆண்டு துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் குறைந்துள்ளன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

எதிர்காலத்தில் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களைப் பொலிஸாரால் கட்டுப்படுத்தமுடியும் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

துப்பாக்கிதாரிகள் இலக்கு வைக்கப்படும் நபர்களுக்குப் பதிலாக அவர்களின் உறவினர்களைக் கொல்லும் போக்குக் காணப்படுகின்றது என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார். (எ-இ)

## 650 பேரின் வேலைக்கு ஆபத்து!

கொழும்பு, மே 21

சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தில் பணியாற்றும் 650க்கும் மேற்பட்ட ஊழியர்களின் வேலைவாய்ப்பு இழக்கப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது. இந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் அரசாங்கத்துக்குச் சொந்தமான நிறுவனமாக மாற்றப்பட்டுள்ளதாலேயே இந்த நிலை ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

## ஞானசாரருக்கு பொதுமன்னிப்பு பௌத்த தலைவர்கள் கோரிக்கை

கொழும்பு, மே 21

வெசாக் தினத்தை முன்னிட்டு பொதுபலசேனாவின் பொதுச்செயலாளர் ஞானசார தேரருக்கு ஜனாதிபதி மன்னிப்பு வழங்கவேண்டும் என பௌத்த மதத்தலைவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

தேசிய ஐக்கியம், சமூக ஆதரவு ஆகியவற்றை ஊக்குவிப்பதில் ஞானசார தேரர் வழங்கிய பங்களிப்பை கருத்தில் கொண்டு மன்னிப்பு வழங்க வேண்டும் என பௌத்தபீடங்களின் தலைவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். இது தொடர்பில் ஜனாதிபதிக்கு கடிதமொன்றைஎழுதியுள்ள பௌத்தமதத் தலைவர்கள் சமூகத்தில் தீவிரவாத சக்திகளின்செயற்பாடுகள் தொடர்பாக எச்சரிக்கும் நடவடிக்கையில் ஞானசாரதேரர் ஈடுபட்டுள்ளார் எனச் சுட்டிக்காட்டியுள்ளதுடன், பாதுகாப்புப் படையினருக்கு ஆதரவளித்தமை, இலங்கையில் சில தீவிரவாத சக்திகள் தங்கள் நடவடிக்கைகளை விஸ்தரிப்பதைத் தடுக்க உதவியமை போன்ற காரணங்களால் தீவிரவாதச் செயற்பாடுகள் கடந்தகாலங்களில் தடுக்கப்பட்டிருந்தன என்றும் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளனர். (எ-இ)



## தினம் தெரியுமோ?

'பூவே உனக்காக' எண்ட படத்தைக் கனபேர் பார்த்திருப்பியள். அதில விஜய் பற்றின உண்மையை அந்த ஊரில இருக்கிற ஒருத்தர் அறிஞ்சிடுவார். 'இந்தா போய் எல்லாருக்கும் சொல்லுறன்' எண்டு வெளிக்கிட்டவர், எதிர்பாராத விதமா ஒரு கத்தி கழுத்தில பாய்ஞ்சு, பேசவே முடியாமல் ஆஸ்பத்திரியில படுத்திடுவார். எண்டாலும் அப்பவும் உண்மையைச் சொல்ல ஆள் விதவிதமா 'ட்ரை' பண்ணுவார். ஆனால் அதுக்கெல்லாம் வேற அர்த்தம் சொல்லி, அவர் சொல்ல வந்த உண்மையைச் சொல்லவிடாமலே செய்துபோடுவினம். இப்பிடிப் படத்தில வந்தமாதிரி ஒரு காட்சி இப்ப உண்மையாவும் நடக்குதோ எண்டு கனபேருக்கு சந்தேகமா இருக்கு. தமிழரசுக்கட்சியின்ர முந்தின தலைவர் சம்பந்தருக்கு இப்ப வயசு போனதால, முந்தினமாதிரி கதைக்க ஏலாமல் இருக்கிறார். அவர் என்ன சொல்லுறார் எண்டது அவரின்ர பிள்ளைகளே கனக்க கஷ்டப்பட்டுத்தான் கண்டுபிடிக்கினம். ஆனால் பொதுவேட்பாளர் வேண்டாமெண்டும், ஒஸ்லோ உடன்படிக்கையை ஏற்கிற வேட்பாளரைத்தான் ஆதரிக்கோணும் எண்டும் சம்பந்தர் சொன்னதாச் சிலர் பொதுவில சொல்லிக்கொண்டு திரியினம். ஆனால் சம்பந்தர் உண்மையாவே அப்பிடிச் சொன்னவர் தானா எண்டது அவருக்கு மட்டும்தான் வெளிச்சம்.

இப்ப என்னெண்டால், சம்பந்தர் சொன்னதாலதான் தாங்கள் பொதுவேட்பாளரை எதிர்க்கிறமெண்டு ஒரு கோஷ்டி தமிழரசுக் கட்சிக்குள்ள வெளிக்கிட்டிருக்கு. முந்தநாள் வவுனியாவில நடந்த மத்திய குழுக்கூட்டத்தில, முக்கால்வாசி நேரம் இந்தப் பொதுவேட்பாளர் பற்றித்தான் ஓயாமல் கதைச்சும் ஒரு முடிவுக்கும் வராமல் வெளிக்கிட்டிருக்கினம். பொதுவேட்பாளர் விசயத்தை எதிர்க்கிறவை, என்னத்துக்காக பொது வேட்பாளரை வேண்டாமெண்டுகினம் எண்டதுக்கு ஒரு தர்க்கபூர்வ நியாயமும் சொல்லுகினம் இல்லையாம். அதோட பொதுவேட்பாளர் இல்லாட்டி ஆரை ஆதரிக்கிறது எண்டு கேட்டதுக்கும் அவையிட்ட மறுமொழி இல்லையாம். எப்பிடி கண்ணை மூடிக்கொண்டு மோட்டுத்தனமா சரத் பொன்சேகாவை ஆதரிச்சினமோ, எப்பிடி மைத்திரிக்கும் ரணிலுக்கும் முட்டுக் குடுத்தினமோ அப்பிடி இப்பவும் ஒரு பிளான் இல்லாமல் அவை இருக்கினம்.

தமிழரசின்ர இப்பத்தைய மத்தியகுழுவில இருக்கிற கனபேர் பொதுவேட்பாளர் விசயத்தில எதிராத்தான் நிக்கினம். அப்பிடி பெரும்பான்மையான ஆக்கள் எதிரா நிண்டா, அதையே ஒரு முடிவா எடுக்கலாம் தானே. ஆனால் அங்கதான் இருக்குது சிக்கல். பொதுவேட்பாளரை ஏன் எதிர்க்கிறம்? எண்டது அவையில கனபேருக்குத் தெரியாது. அவையள் 'வைன்' குடுத்த பொம்மையள். சொன்னபடி ஆடத்தான் தெரியுமே தவிர. சொந்தமா யோசிக்க மாட்டினம். அதால, தாங்கள் பொதுவேட்பாளருக்கு எதிரா முடிவெடுக்க, சனம் வேறமாதிரி முடிவெடுத்தால் அவையின்ர அரசியல் கனவில மண்தான். அதாலதான், இந்த விசயத்தை எவ்வளவுக்கு முடிவெடுக்காமல் இழுக்க ஏலுமோ அவ்வளவுக்கு இழுபட வைக்கத்தான் அவை நினைப்பினம். பொதுவேட்பாளரை ஆதரிக்கிறதோ இல்லையோ எண்டுகூட முடிவெடுக்க ஏலாதவை தான், நாளைக்கு உரிமையை வாங்கித் தருவம் எண்டு வெட்டி விழுத்திற கதையளோட வாக்கு கேட்டு வருவினம். அப்ப இருக்கு கச்சேரி.

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** காரியங்கள் அனுகூலமாகும். சகோதரர்கள் வழியில் செலவுகள் ஏற்பட்டாலும், அதனால் மகிழ்ச்சியே உண்டாகும். உறவினர்கள் வழியில் வீட்டில் சிறுசிறு பிரச்சினைகள் ஏற்படக்கூடும். பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது.

**இடபம்:** கணவன் – மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். தேவையான பணம் கையில் இருப்பதால் உற்சாகத்துடன் காணப்படுவீர்கள். சிலருக்குக் குடும்பத்துடன் குல தெய்வப் பிரார்த்தனையை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படும்.

**மிதுனம்:** எதிர்பார்த்த பணம் கிடைப்பதால், செலவுகளைச் சமாளிப்பதில் சிரமம் எதுவும் இருக்காது. சிலருக்குத் தாய்வழி உறவுகளால் ஆதாயம் உண்டாகும். தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள்.

**கடகம்:** எதிர்பாராத செலவுகள் அதிகரித்தாலும் சமாளிக்கத் தேவையான பணம் கிடைத்துவிடும். உறவினர்கள் மற்றும் நண்பர்களுக்காக செலவு செய்யவேண்டி வரும். ஆனாலும், உற்சாகத்துக்குக் குறைவிருக்காது.

**சிம்மம்:** வரவும் செலவும் அடுத்தடுத்து வந்தாலும் சமாளித்துவிடுவீர்கள். தந்தையின் தேவையை நிறைவேற்றுவீர்கள். குடும்பத்தினருடன் வெளியிடங்களுக்குச் சென்று வருவீர்கள். சிலருக்கு எதிர்பாராத பொருள் சேர்க்கைக்கும் வாய்ப்பு உண்டு.

**கன்னி:** சோர்வு நீங்கி உற்சாகத்துடன் செயற்படுவீர்கள். பிள்ளைகள் பிடிவாதம் பிடித்தாலும், அவர்களை அரவணைத்துச் செல்வது அவசியம். முடிந்தவரை அவர்களின் விருப்பத்தை நிறைவேற்ற முயற்சி செய்யவும்.

**துலாம்:** இன்று புதிய முயற்சிகளில் ஈடுபட வேண்டாம். மற்றவர்களுடன் வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும் என்பதால், பேசும்போது பொறுமை அவசியம். எதிர்பார்த்த காரியம் முடிவதில் தாமதம் ஏற்படக்கூடும்.

**விருச்சிகம்:** தாய்வழி உறவுகளால் நன்மை ஏற்படும். வாழ்க்கைத்துணையால் ஆதாயம் உண்டாகும். குடும்பத்தில் உங்கள் யோசனைக்கு முக்கியத்துவம் கிடைக்கும். தாயாரின் உடல்நலனில் கவனம் தேவை.

**தனுசு:** உற்சாகமான நாள். மனஉறுதியுடன் செயற்படுவீர்கள். சகோதரர்கள் உங்களுடைய யோசனையை ஏற்றுக்கொள்வார்கள். சிலருக்கு புதிய ஆடை, ஆபரணங்களின் சேர்க்கை உண்டாகும்.

**மகரம்:** புதிய முயற்சிகள் எதுவும் வேண்டாம். பிள்ளைகளால் செலவுகள் ஏற்பட்டாலும் அவசியமான செலவுகளாகவே இருக்கும். சிலருக்கு தெய்வப்பணிகளில் கலந்துகொள்ளும் வாய்ப்பு உண்டாகும்.

**கும்பம்:** இன்றைக்கு எதிலும் நிதானமாகச் செயற்படவும். வீண் அலைச்சலைத் தவிர்ப்பது நல்லது. சிலருக்கு தாய்வழி உறவுகளால் செலவுகள் ஏற்படக்கூடும். சகோதரர்களால் ஆதாயம் கிடைக்க வாய்ப்புள்ளது.

**மீனம்:** தெய்வ அனுகூலம் நிறைந்த நாளாக இருக்கும். வீட்டில் உற்சாகமான சூழ்நிலை காணப்படும். தாயின் விருப்பத்தைப் பூர்த்தி செய்வீர்கள். கணவன் – மனைவிக்கிடையே ஏற்பட்ட பிணக்குகள் நீங்கும். வியாபாரத்தில் வரவு சுமாராகத்தான் இருக்கும்.



# மழையுடன் வீசிய காற்று கோவில் கூரை சேதம்!

யாழ்ப்பாணம், மே 21

யாழ்ப்பாணத்திலுள்ள ஆலயம் ஒன்றின் கூரை, கடந்த சனிக்கிழமை, மழையுடன் வீசிய காற்றுக் காரணமாக, முழுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது என யாழ்ப்பாண அனர்த்த முகாமைத்துவப் பிரிவின் பிரதிப் பணிப்பாளர் ரி.என்.சூரியராஜா தெரிவித்துள்ளார்.

வேலணைப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட ஜே/21 கிராம சேவகர் பிரிவிலுள்ள ஆலயம் ஒன்றின் கூரையே இவ்வாறு சேதமடைந்துள்ளது. இருப்பினும் உயிராபத்துகள் எவையும் ஏற்படவில்லை என அவர் மேலும் தெரிவித்தார். (ப-27-125)

# காலநிலையால் 10, 299 பேர் பாதிப்பு

கொழும்பு, மே 21

**நாட்டில் நிலவும் காலநிலை காரணமாக 3 ஆயிரத்து 518 குடும்பங்களைச் சேர்ந்த 10 ஆயிரத்து 299 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும், இருவர் காயமடைந்துள்ளனர் என்றும் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பிரதிப் பணிப்பாளர் துசித வைத்தியரத்ன தெரிவித்துள்ளார்.**

அநுராதபுரம் மாவட்டத்தின் கிழக்கு நுவரகம்பலத்த பிரதேசத்தில் பெய்த கனமழை மற்றும் மரங்கள் முறிந்து வீழ்ந்ததால் இருவர் காயமடைந்துள்ளனர். இரத்தினபுரி மாவட்டத்தில் நிவிதிகல, கொடகவெல மற்றும் பலாங்கொட ஆகிய இடங்களில் மரங்கள் முறிந்து வீழ்ந்ததாலும், பலத்த காற்றுக் காரணமாகவும் மூன்று வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன. அதேவேளை, யாழ்ப்பாணத்தில் 8 ஆயிரம் பேரும், திருகோண மலையில் ஆயிரத்து 334 பேரும், கிளிநொச்சியில் 946 பேரும் வரட்சியால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)



# ஜனாதிபதி ரணில் வருகை முன்னாயத்தக் கூட்டம்

யாழ்ப்பாணம், மே 21

வடக்கு மாகாணத்துக்கான ஜனாதிபதியின் வருகை தொடர்பான முன்னாயத்தக் கலந்துரையாடல், வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தின் கேட்போர் கூடத்தில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

ஜனாதிபதியால் வடக்கில் முன்னெடுக்கப்படவுள்ள திட்டங்கள், திட்டங்களுக்குப் பொறுப்பான துறைசார் அதிகாரிகளின் கடமைகள், பாதுகாப்பு நடைமுறைகள், நிகழ்ச்சி நிரல் திட்டமிடல் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டன.

வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் மற்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோரின் தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் பாதுகாப்புப் பிரிவினர், பொலிஸார், மாவட்டச் செயலர்கள் உள்ளிட்ட துறைசார் அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர். (ப-27)

# விவாதத்துக்கு திகதி பரிந்துரை

கொழும்பு, மே 21

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ மற்றும் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்கவுடனான கட்சியின் பொருளாதார நிபுணர்களுக்கு இடையிலான விவாதத்துக்கான புதிய திகதிகளை ஐக்கிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார ஜயமஹ, தேசிய மக்கள் சக்தியின் செயற்குழு உறுப்பினர் கலாநிதி நலிந்த ஜயதிஸ்ஸவுக்கு கடிதம் மூலமாகப் பரிந்துரைத்துள்ளார்.

இரு தலைவர்களுக்கும் இடையிலான விவாதம் ஜூன் மாதம் 3, 4, 5, 6 மற்றும் 7ஆம் திகதிகளிலும், பொருளாதார நிபுணர்களுக்கு இடையேயான விவாதத்தை இந்த மாதம் 27, 28, 29, 30 மற்றும் 31 ஆகிய திகதிகளிலும் நடத்தமுடியும் என்று அவர் பரிந்துரைத்துள்ளார். (எ-இ)



# நாகபூஷணி அம்மன் ஆலயத் திருவிழா முன்னாயத்தக் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், மே 21

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவப் பெருவிழாவை முன்னிட்டு, முன்னாயத்தக் கலந்துரையாடல், ஆலய அலுவலக மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. வேலணைப் பிரதேச செயலாளர் க.சிவகரன் தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடலில், திணைக்களத் தலைவர்கள் மற்றும் ஆலய அறங்காவலர் ஆகியோர் கலந்துகொண்டனர். (ப-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## பொதுவேட்பாளரும் தமிழரசுக்கட்சியும்


ஜனாதிபதித் தேர்தலின்போது தமிழ்ப் பொது வேட்பாளர் நிறுத்தப்படுவது என்ற கொள்கை முடிவை ஆதரிப்பதா? இல்லை எதிர்ப்பதா? என்ற தீர்மானத்தை எடுப்பது தொடர்பில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய குழுவில் ஆராயப்பட்டபோதும் தீர்க்கமான முடிவு எதுவும் எட்டப்படவில்லை. இந்த விவகாரத்தில் அந்தக் கட்சிக்குள் இரு நிலைப்பாடுகள் இருக்கின்றன என்பது கூட்டத்தில் வெளிப்பட்டுள்ளது. இவை எல்லாவற்றுக்கும் மேலாக இந்த விவகாரம் தொடர்பில் அந்தக் கட்சியின் முன்னாள் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்ததாக நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் கூறிய கருத்துகள் வெளியாகியிருந்தன. தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும், சிறிலங்கா அரசாங்கத்துக்கும் இடையில் நோர்வே தலைநகர் ஒஸ்லோவில், நோர்வேயின் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்துடன் இடம்பெற்ற பேச்சுகளின் அறிக்கையில் சொல்லப்பட்ட விடயம் இரா.சம்பந்தனால் பேசுபொருளாக்கப்பட்டிருந்தது. 'தமிழர்களுக்கு உள்ளக சுயநிர்ணய அடிப்படையில் தமிழர்களின் பூர்வீக நிலத்தில் சுயாட்சி அதிகாரம் வழங்கும் அரசியல் தீர்வு தொடர்பில் அரசும் - புலிகளும் ஆராய்வர்' என்பதே ஒஸ்லோ அறிக்கையில் உள்ள விடயம். இதை ஒஸ்லோப் பிரகடனம், ஒஸ்லோ ஒப்பந்தம் என்று ஆளுக்காள் அர்த்தப்படுத்திக்கொள்கின்றனர். இதற்குக் குறைவான தீர்வுக்கு இணங்கமுடியாது எனவும் அதாவது 'தமிழர்களுக்கு உள்ளக சுயநிர்ணய அடிப்படையில் தமிழர்களின் பூர்வீக நிலத்தில் சுயாட்சி அதிகாரம் வழங்கும் அரசியல் தீர்வை' விடக்குறைந்த அரசியல் தீர்வுக்கு இணங்கமுடியாது எனவும் அதனால் தமிழ்ப்பொதுவேட்பாளர் யோசனையை எதிர்ப்பதாகவும் இரா.சம்பந்தன் குறிப்பிட்டார் என சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

சம்பந்தன் தெரிவித்ததாகச் சொல்லப்படும் விடயத்தை யொட்டி இரண்டு கேள்விகள் எழுகின்றன.

தமிழ்ப் பொதுவேட்பாளராக நிறுத்தப்படுபவரின் கொள்கை நிலைப்பாடுகள் தொடர்பில் தமிழ்ச் சிவில் சமூகம் தெளிவான தீர்மானங்களை அறிவித்திருந்தது. 'தமிழ் மக்களின் நீண்டகால அபிலாசைகளில் ஒன்றான இறைமையுடனான சுயநிர்ணய உரிமையை வெற்றிகொள்வதற்கான பொருத்தமான எதிர்காலக் கட்டமைப்புகளை நோக்காகக் கொண்டு செயற்படுவது' என்ற கொள்கை முடிவை அது எடுத்திருந்தது. சம்பந்தன் அச்சப்படுவதைப்போன்று ஒஸ்லோ அறிக்கையில் சொல்லப்பட்ட அரசியல் தீர்வை விடக் குறைவான தீர்வு முன்மொழிவை தமிழ் பொதுவேட்பாளர் முன்வைக்கப் போவதில்லை. அப்படியிருக்கையில் சம்பந்தன் இந்தக் காரணத்தைக் குறிப்பிட்டு தமிழ்ப்பொதுவேட்பாளரை எதிர்ப்பது அபத்தம் என்றே சொல்லவேண்டியிருக்கின்றது.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக இரா.சம்பந்தன் கடந்த 14ஆண்டுகளில் சிறிலங்கா அரசாங்கங்களுடனான பேச்சுகளின்போது ஒஸ்லோ அறிக்கை அடிப்படையிலான தீர்வை வலியுறுத்தவில்லை என்பது மாத்திரமல்லாது, அதைவிடக் குறைந்த ஒற்றையாட்சி அரசமைப்பை தொடர்ந்தும் பேணும் வகையிலான புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்கும் முட்டுக்கொடுத்திருந்தார். நல்லாட்சிக் காலத்தில் உருவாக்கப்பட்ட புதிய அரசமைப்பு ஏக்கிய ராஜ்ஜிய/ஒருமித்த நாடு என்று புதிய சொற்றொடர் ஊடாக முலாம்பூசிய ஒற்றையாட்சி அரசமைப்புக்கு சம்பந்தனும் - சுமந்திரனும் இணங்கினர் என்பது முக்கியமானது. அது மாத்திரமல்லாது, பௌத்தத்துக்கு முதலிடம் என்ற கோட்பாட்டை ஏற்கின்றோம் எனப் பகிரங்கமாக நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் கருத்து வெளியிட்டதுடன் அதை நியாயப்படுத்தியும் இருந்தார். இதற்கு அப்பால், புதிய அரசமைப்பு உருவாக்கத்தின்போது வடக்கு - கிழக்கு இணைப்பு சாத்தியமில்லை எனத் தெரிவித்தவர் சுமந்திரன்.

ஒஸ்லோ அறிக்கைக்கு நேர் எதிராக 180பாகை கோணத்தில் செயற்பட்ட சம்பந்தன் - சுமந்திரன் இணைதான், ஒஸ்லோ அறிக்கைக்கு குறைவான தீர்வுக்கு இணங்கமுடியாது என்பதால் தமிழ்ப்பொதுவேட்பாளரை எதிர்ப்பதாகக் கூறுவது நகைப்புக்கிடமானது. அதுவும் தமிழ்ப்பொதுவேட்பாளரின் கொள்கை நிலைப்பாடாக அவ்வாறானதொரு விடயம் இல்லாத நிலையில், இல்லாததை உள்ளதாக்கி மக்களை ஏமாற்ற முனைவது அபத்தத்திலும் அபத்தம்.




# அரசுடன் நெருக்கமானோருக்கு 978 பில். ரூபா சலுகையாம்

கொழும்பு மே 21

அரசாங்கத்தின் பிரதிநிதிகள் மற்றும் அவர்களுக்கு நெருக்கமானவர்கள் உள்ளிட்ட அரசாங்கத்துக்கு வெவ்வேறான சந்தர்ப்பங்களில் உதவிகளை வழங்கிய வர்த்தகர்களுக்கு வழங்கப்பட்ட வரி நிவாரணங்களுக்காக 978 பில்லியன் ரூபா குறிப்பிட்ட சில வருடங்களுக்குள் இழக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் பொருளாதார நிலைமைகளை ஆய்வு செய்யும் நிறுவனம் ஒன்றின் publicfinance.lk என்ற இணையத்தளத்தில் இத் தகவல்களை வெளிப்படுத்தியுள்ளது.

இவ்வாறு இழக்கப்பட்டுள்ள வரி வருவாயின் அளவு, கடந்த 2022ஆம் ஆண்டில் அரசாங்கத்துக்கு சேர்க்கப்பட்ட வரி வருவாயில் 56 வீதமாகும்.

2024ஆம் ஆண்டின் மார்ச் மாதம் 31ஆம் திகதி இலங்கையின் நிதி அமைச்சின் மூலம் வெளியிடப்பட்ட வரிச் செலவுகள் அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு இந்த ஆய்வு நடத்தப்பட்டுள்ளது. இலங்கை வழங்கியுள்ள வெவ்வேறான வரி நிவாரணங்களால் அரசாங்கம் இழந்துள்ள வருவாயை இந்த அறிக்கை மூலம் தெரிந்துகொள்ள முடிகிறது. (எ-இ)

# இலங்கை வரும் எலான் மஸ்க்



கொழும்பு, மே 21

ஸ்டார்லிங்க் செயற்கைக்கோள் இணைய சேவையைத் தொடங்குவதற்காக இந்த ஆண்டு இலங்கைக்கு வருமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அழைப்பை எலான் மஸ்க் ஏற்றுக்கொண்டுள்ளார் என்று ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நேற்றுமுன்தினம் இந்தோனேஷியாவின் பாலியில் எலான் மஸ்கினை சந்தித்து, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, செயற்கை நுண்ணறிவு மற்றும் உலக அரசியல் உள்ளிட்ட விடயங்களில் கலந்துரையாடினார். இந்நிலையில் எலான் மஸ்கின் இலங்கை விஜயத்தின் சரியான திகதிகள் இன்னும் நிர்ணயிக்கப்படவில்லை, இலங்கை அரசாங்கம் எலான் மஸ்கின் குழுவுடன் தொடர்பு கொண்டு ஏற்பாடுகளை இறுதி செய்யவுள்ளது. இலங்கை இதற்கான ஒப்புதல் செயல்முறையை விரைவுபடுத்தி முடிந்தவுடன், செயற்கைக்கோள் இணைய சேவையை அறிமுகப்படுத்த எலான் மஸ்க் இலங்கைக்கு வருவார். இந்த ஆண்டின் இறுதியில் அவர் இலங்கைக்கு வருவது தொடர்பாக விவாதிக்கப்பட்டது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (எ-இ)

## புதிய சட்டவரைவால் வேலைக்கு ஆபத்து

நாடாளுமன்றத்தில் எதிர்வரும் 22ஆம் திகதி சமர்ப்பிக்கப்படவுள்ள பொருளாதார மறுசீரமைப்புச் சட்டவரைவால் உள்ளக வேலை வாய்ப்புகளுக்கு ஆபத்து ஏற்படும் என்று மக்கள் விடுதலை முன்னணி எச்சரித்துள்ளது.

இந்தச் சட்டவரைவு பெரும் வணிகர்களுக்கு வசதியாகவும், உள்ளக வேலை வாய்ப்புகளுக்கு ஆபத்தானதாக மாறும் என்றும் அந்தக் கட்சி தெரிவித்துள்ளது. (எ-இ)

## ரஷ்யாவில் தூதுவருக்கு பதிலாக அதிகாரி

ரஷ்யாவுக்கான இலங்கைத் தூதுவர் பதவிக்கு தற்போது ஏற்பட்டுள்ள வெற்றிடத்துக்கு, வெளிவிவகார அமைச்சின் உயர் அதிகாரி ஒருவரை தூதரகத்துக்கு அனுப்ப அரசாங்கம் தீர்மானித்துள்ளது. புதிய தூதுவர் நியமிக்கப்படும் வரை அந்தப் பதவிக்கு வெளிவிவகார அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் பொறுப்பு வகிப்பார் என தெரிவிக்கப்படுகிறது. (எ-இ)

## லஞ்ச் சீற்றுக்குத் தடை

கொழும்பு, மே 21

அடுத்த வருடம் முதல் லஞ்ச் சீற்றை முற்றாகத் தடை செய்ய மத்திய சுற்றாடல் அதிகார சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

அடுத்த ஆண்டு முதல் லஞ்ச் சீற் உற்பத்தி, இறக்குமதி மற்றும் விற்பனையைத் தடை செய்வது தொடர்பான சட்டப் பணிகளை மத்திய சுற்றுச்சூழல் அதிகாரசபை மேற்கொள்ளும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

நாளை

22.05.2024

புதன்கிழமை

வைகாசி - 09

சுபநேரம் : 04.22 - 05.52

ராகுகாலம் : 11.52 - 01.22

நாளொரு நல்வார்த்தை

பொய் சொல்லித் தப்பிக்க நினைக்காதே.
உண்மையைச் சொல்லி மாட்டிக்கொள்
ஏனென்றால் பொய் வாழவிடாது.
உண்மை சாகவிடாது.

-விவேகானந்தர்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# போலி மருத்துவர்கள்; இனி கடும் நடவடிக்கை

கொழும்பு, மே 21

போலி மருத்துவர்களால் மக்களின் உடல் நலத்துக்கு ஏற்படும் கடுமையான சுகாதார அச்சுறுத்தலைக் கட்டுப்படுத்த தண்டனைச் சட்டத்தில் திருத்தம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என்று அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்க ஊடகப் பேச்சாளர் சமில் விஜயசிங்க தெரிவிக்கையில்;

நாடு முழுவதும் கிட்டத்தட்ட 40 ஆயிரம் போலி மருத்துவர்கள் காணப்படுகின்றனர்.

அவர்களைக் கண்டறிந்து நீதிமன்றில் முன்னிலைப்படுத்துபவர்களுக்கு 3,000 ரூபா அபராதம் விதிக்கப்படுவதால் தண்டப்பணத்தைச் செலுத்தி மீண்டும் அதே குற்றத்தைச் செய்வார்கள். அதனால் அபராதத் தொகையைக் கணிசமாக அதிகரிக்கவும் கடுமையான சிறைத்தண்டனை விதிக்கவும் தேசிய மருந்துகள் ஒழுங்குமுறைச் சட்டம் மற்றும் தண்டனைச் சட்டத்தில் திருத்தம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது - என்றார். (ச-இ)

## தடையை மீறி மீன் விற்பனை

*வியாபாரிகள் அகற்றம்*

யாழ்ப்பாணம், மே 21

வலி. தெற்குப் பிரதேசசபையின் ஏழாலை உப அலுவலக எல்லைக்குட்பட்ட மயிலங்காடுச் சந்தையிலிருந்து 500 மீற்றர் சுற்றுவட்டாரத்துக்குட்பட்ட பகுதிகளில் மீன், இறைச்சி, மரக்கறி என்பன விற்பனை செய்வதற்குத் தடை செய்யப்பட்டுள்ளது.

இந்தநிலையில் தடையை மீறி விற்பனை செய்தவர்களை அங்கிருந்து அப்புறப்படுத்தும் நடவடிக்கை வலிகாமம் தெற்குப் பிரதேசசபையின் ஏழாலை உப அலுவலக வருமானப் பரிசோதகர் தலைமையில் கடந்த சனிக்கிழமை முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ப-66)

## தாலிக்கொடி திருட்டு

யாழ்ப்பாணம், மே 21

பேருந்தில் பயணித்த பெண் ஒருவரின் தாலிக்கொடி திருடப்பட்டுள்ளது என்று கடந்த சனிக்கிழமை மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது,

ஆறுகால்மடத்தை வசிப்பிடமாகக் கொண்ட பெண் ஒருவர், தனது வீட்டிலிருந்து சுழிபுரம் நோக்கி பேருந்தில் பயணித்து, மீள ஆறுகால்மடம் நோக்கி வரும்போது, தாலிக்கொடியைக் கைப்பையினுள் வைத்து வந்துள்ளார். அந்தச் சந்தர்ப்பத்தில் பேருந்தில் தனது தாலிக்கொடி காணாமற் போயுள்ளதாக மானிப்பாய்ப் பொலிஸாரிடம் பெண் முறைப்பாடு செய்துள்ளார். (ப-125)

## நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், மே 21

நீரிழிவு முகாமையில் 'உணவு, உள்ளம், உடற்பயிற்சி' எனும் நூலின் வெளியீட்டு விழா, சுன்னாகத்திலுள்ள யாழ்.சித்த மருத்துவமனை மண்டபத்தில் எதிர்வரும் 23 ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 3.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

யாழ்.சித்த மருத்துவமனை இயக்குநரும், சித்த மருத்துவ நிபுணருமான வெ. ஜெகதீஸ்வரன் தலைமையில் இடம்பெறவுள்ள நிகழ்வில் வடமாகாண சுதேச மருத்துவத் திணைக்கள ஆணையாளர் மருத்துவர் திருமதி கனகேஸ்வரி ஜெபநாமகணேசன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார். (ப-66)

## கள் விற்றவர் கைது



யாழ்ப்பாணம், மே 21

சட்டவிரோதமாக கள் விற்பனையில் ஈடுபட்ட நபர் ஒருவர், நெடுந்தீவுப் பொலிஸாரால் கடந்த சனிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

நெடுந்தீவுப் பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற புலனாய்வுத் தகவலுக்கமைவாக சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார், வீடு ஒன்றினுள் ஆயிரத்து 500 மில்லிலீற்றர் கள் விற்பனை செய்த சந்தேகநபரைக் கைது செய்துள்ளனர். சந்தேகநபருக்கெதிராக ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்து, மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ப-125)

## சொற்பொழிவு

யாழ்ப்பாணம், மே 21

புத்தூர் கிழக்கு, தல்லுடை அருள்மிகு ஸ்ரீ கன்னியர் வைரவர் ஆலய அலங்கார உற்சவத்தை முன்னிட்டு, நாளை புதன்கிழமை தொடக்கம் எதிர்வரும் முதலாம் திகதி சனிக்கிழமை வரை தினமும் மாலை 7.30 மணிக்கு, சிவநெறிப் பிரகாசர் சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கம் ஒழுங்கமைப்பில் 'கருட புராணம்' என்னும் விடயப் பொருளில் சிறப்புச்சொற்பொழிவு இடம்பெறவுள்ளது. (ப)

**** **** *****

நீர்வேலி, மே 21

அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானத்தில் நடத்தும் வாராந்தச் சுக்கிரவாரச் சிறப்புச்சொற்பொழிவு, ஆலய சண்முக விலாச மண்டபத்தில் எதிர்வரும் 24 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு நடைபெறவுள்ளது.

சிவநெறிப் பிரகாசர் சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் இடம்பெறவுள்ள நிகழ்வில் 'குரு உபதேசம்' என்னும் விடயப்பொருளில் சைவப்புலவர் பிரசங்க பூஷணம் க. கைலநாதனின் சிறப்புச்சொற்பொழிவு இடம்பெறும். (ப)

**** **** *****

நவாலி, மே 21

சைவ வாழ்வியலில் திருவாசகம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக, சிவநெறிப் பிரகாசர் சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கம் ஒழுங்கமைப்பில் வாராந்த திருவாசகச் சிறப்புச் சொற்பொழிவுத் தொடர்-6, நவாலி தெற்கு திருவருள்மிகு ஸ்ரீ நாகராஜா ராஜேஸ்வரி அம்பாள் திருக்கோவில் பிரதான மண்டபத்தில் எதிர்வரும் 24 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் 'மாணிக்கவாசகரும் நீத்தல் விண்ணப்பமும்' என்னும் விடயப் பொருளில் சைவப்புலவர் பிரசங்க பூஷணம் செ.த. குமரனின் சொற்பொழிவு இடம்பெறவுள்ளது. (ப)

## போதை மற்றும் புகைத்தல் எதிர்ப்புவாரம் கடைப்பிடிப்பு

சாவகச்சேரி, மே 21

சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் பன்னாட்டு போதை மற்றும் புகைத்தலுக்கான எதிர்ப்பு தினவாரம் மே 31 ஆம் திகதி முதல் ஜூன் 14 ஆம் திகதி வரை நாடளாவிய ரீதியில் கடைப்பிடிக்கப்படவுள்ளது.

'நண்பா போதைக்கும், புகைத்தலுக்கும் முற்றுப்புள்ளி வைப்போம். வலுவான தேசம் ஒன்றை நிலைநாட்டுவோம்' என்ற தொனிப்பொருளின் கீழ் அனுஷ்டிக்கப்படவுள்ள எதிர்ப்பு வாரத்தில் கிடைக்கும் பணத்தொகை மாணவர்களின் கல்வித் தேவைக்கு பயன்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-25-9)

## பிடியாணை பிறப்பிக்கப்பட்டவர் பொலிஸாரால் நேற்றுக் கைது!

யாழ்ப்பாணம், மே 21

மாங்குளம் நீதிமன்றத்தால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டவர் ஊர்காவற்றுறையில் வைத்து ஊர்காவற்றுறை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மாங்குளம் நீதிமன்றில் 5 வழக்குகளின் தவணைகளுக்கு சமுகமளிக்காது தலைமறைவாகிய சந்தேகநபருக்கு எதிராக ஐந்து பிடியாணை பிறப்பிக்கப்பட்ட நிலையில், கிடைக்கப்பெற்ற புலனாய்வுத் தகவலுக்கமைவாகவே சந்தேகநபர் கைது செய்யப்பட்டார்.

தொடர்ந்து குறித்த நபரை மாங்குளம் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்குரிய நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ப-125)

## வீட்டின் மீது தாக்குதல் இருவர் கைதாகினர்

யாழ்ப்பாணம், மே 21

சுன்னாகம் பகுதியில் வீடொன்றுக்குள் அத்துமீறித் தாக்குதல் நடத்திய இருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கனடாவில் இருந்து வருகை தந்த இருவர் கொடுக்கல் வாங்கல் விடயம் தொடர்பாக வீட்டினுள் உட்புகுந்து காயம் ஏற்படுத்தினார்கள் என்று வழங்கப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைவாகவே அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். (ம-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கட்டுக்கரைக்குள புலவு தெரிவு; கலந்துரையாடலில் இணக்கம்!

மன்னார் கட்டுக்கரைக்குளத்தின் கீழான சிறுபோகச் செய்கைக்கான புலவு தெரிவு செய்வது தொடர்பாக மன்னார் மாவட்ட செயலர் தலைமையில் அரச அதிகாரிகளுக்கும், விவசாயிகள் பிரதிநிதிகளுக்கும் இடையிலான கலந்துரையாடல் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

மன்னார் கட்டுக்கரைக்குளத்தின் கீழ் இவ்வாண்டு சிறுபோக நெற்செய்கைக்கான புலவுகளைத் தெரிவு செய்வதில் விவசாயிகளுக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்து மாந்தை மேற்கு பிரதேச விவசாயிகள் மன்னார் மாவட்ட செயலகத்துக்கு முன்பாக கடந்த திங்கட்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அதையடுத்தே கடந்த செவ்வாய்க்கிழமை இந்தக் கலந்துரையாடல் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. நெடுங்கண்டல் வாய்க்கால் திறக்கப்படும் என்றும், புலவுக் காணிகள் அளக்கப்பட்டு குறிப்பிட்டவர்களுக்கு வழங்கப்படும் என்றும் இந்தக் கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கலந்துரையாடலில் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், பிரஜைகள் குழு தலைவர் அருட்தந்தை மாக்கஸ் அடிகளார், கமநலசேவை உதவி ஆணையாளர், நீர்ப்பாசனத் திணைக்களப் பொறியியலாளர் மற்றும் கட்டுக்கரைக்குள வதிவிட திட்ட முகாமையாளர் ஆகியோர் கலந்துகொண்டனர். (எ-60)

---


## விண்ணக வாழ்வில் 20 வருட நினைவு அஞ்சலி



மண்ணில் : 29.05.1928 விண்ணில் : 21.05.2004

### அமரர் இராசையா குமாரசாமி

(முன்னாள் உரிமையாளர் இராசையா அன் சன்ஸ் ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்)

எங்கள் அன்பு ஐயாவே!
எம்மீது அன்பு செலுத்தி
என்றென்றும் எமக்காக உழைத்து
எம்மை ஆளாக்கிவிட
எத்தனையோ தியாகங்கள் செய்தீர்கள்
எத்தனை ஆண்டுகள் ஆனாலும்
உங்கள் நினைவு எம்மை விட்டு அகலாது

**அன்னாரின் ஆத்மா சாந்திக்காக ஓயாது பிரார்த்திக்கின்றோம்.**

17/1, புகையிரதக்கடவை வீதி,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

(CS 55127) A-1

## மரண அறிவித்தல்



### செல்லையா மௌனசுந்தரம்

சரவணையைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா மௌனசுந்தரம் அவர்கள் (19.05.2024) ஞாயிற்றுக்கிழமை அன்று கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - இலட்சுமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற பொன்னையா - பராசக்தியின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற மகேஸ்வரியின் அன்புக் கணவரும், மாணிக்கத்தியாகராஜா, காலஞ்சென்றவர்களான கமலாதேவி, சிவபாதசுந்தரம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், மகேந்திரராஜா (கனகராயன்குளம்), மனோராஜ் (பிரான்ஸ்), மலர்விழி (கொழும்பு) ஆகியோரின் அன்புத் தந்தையும், விக்கினேஸ்வரி, நிரஞ்சினி, ஆதீசன் ஆகியோரின் அன்பு மாமனாரும், அருண், இலக்கியா, ஹறிஷன், டிலன், அக்ஷயா, அபிநயா, அரிப்பிரியன் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற யோகேஸ்வரி, இராசலட்சுமி, கமலாதேவி, அன்னலஷ்மி, விஜயலஷ்மி, ஜெகதீஸ்வரன், காலஞ்சென்றவர்களான யோகேஸ்வரி, அட்சயலிங்கம் மற்றும் சுகிர்தரெத்தினம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், காலஞ்சென்றவர்களான சண்முகநாதன், குலநாயகம் மற்றும் சிவகுமார், சிவபாதசுந்தரம் ஆகியோரின் சகலனும், விஜயலஷ்மியின் உடன் பிறவாச் சகோதரனும், திருச்செல்வம் - யோகம்மா, காலஞ்சென்ற சிவஞானம் மற்றும் - பத்மாவதி, காலஞ்சென்றவர்களான குணநாயகம் - இராசலட்சுமி ஆகியோரின் சம்பந்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.05.2024) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் மண்கும்பான் மேற்கு என்னும் விலாசத்தில் உள்ள இல்லத்தில் நடைபெற்று நண்பகல் 12.00 மணிக்கு தகனக் கிரியைக்காக சரவணை புன்னாலம் கண்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**

| | | | |
|---|---|---|---|
| மகேந்திரராஜா | - 077 177 7730, | மனோராஜ் | - +33 758 567 573 |
| நிரஞ்சினி | - +33 758 315 820, | ஆதீசன் | - 077 023 3709 |
| மலர்விழி | - 077 706 0116, | ஜெகதீஸ்வரன் | - 077 981 0537 |

கு.ஆதீசன்
மண்கும்பான் மேற்கு, வேலணை

(CS/540) J-1

## கண்ணீரில் கரைந்த ஈரவிழிகளுடன் 8ம் ஆண்டு நினைவஞ்சலி

பூவுலகில் அவதரிப்பு
20 • 10 • 1950



விண்ணுலக சரணடைவு
19 • 05 • 2016

### அமரர் நாகரத்தினம் கணேஸ்வரி (தேவி)

**திதி :- வளர்பிறை திரியோதசி (21.05.2024)**

அம்மா உன்னைக் கடவுள் தந்த உயிர் என்று சொல்லவவா..
இல்லை கடவுளிலும் உயர்வென்று சொல்லவா?
நிகரில்லா எம் சுவாசம் நீதானே அம்மா...
உருவம் அறியா கருவினில் எம்மை காதல் செய்தவளே
உன்னை பற்றி எழுதாமல் என் எழுத்துகள் கவிதை ஆகுமா?

பாசமுள்ள வேளையிலே காசுபணம் கூடலையே
காசு வந்த வேளையிலே பாசம் வந்து சேரலையே
பாசம் கண்ணீர் பழையகதை எல்லாமே
வெறிச்சோடி போன வேதாந்தம் ஆயிடிச்சே அம்மா....

வைகையில் ஊர்முழுக வல்லூறும் சேர்ந்தழுக
கைப்பிடியாய் எம்மை கூட்டிவந்து
கரை சேர்த்து விட்டவளே
எனக்கொன்று ஆனதன்னா உனக்கு
வேறு பிள்ளை உண்டு உனக்கு
ஒன்று ஆனதண்டா எனக்கு வேற தாய்
உண்டா அம்மா? உன் இடத்தை
எந்த ஒரு உறவாலும் நிரப்ப முடியாது அம்மா..

**ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!**

தொம்பை வீதி,
[illegible]வில் கிழக்கு,
சுன்னாகம்.

(CS/55084) J-1

உங்கள் பிரிவால் துடிக்கும்
அன்புக் கணவர், பாசமுள்ள பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
உற்றார், உறவினர்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வருடாந்த பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகசபைத் தெரிவும்

சங்கானை அரசினர் வைத்திய சாலை நோயாளர் நலன்புரி சங்க பொதுக்கூட்டமும், புதிய நிர்வாக சபைத் தெரிவும் மருத்துவமனை பொறுப்பதிகாரி திருமதி காயத்திரி தனஞ்செயன் அவர்கள் தலைமையில் எதிர்வரும் **02.06.2024** ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் **3.30** மணிக்கு மருத்துவமனை கேட்போர் கூடத்தில் நடைபெறும் என்பதனை செயலாளர் இ.மகேந்திரன் அவர்கள் அறிவித்துள்ளார்.

**இ.மகேந்திரன்**
**செயலாளர்.**

(CS/55134) J-1

## நேற்று இரவு யாழ். நகரில் பேய் மழை!

யாழ்ப்பாணம், மே 21

யாழ்ப்பாணம் நகர்ப்பகுதியில் நேற்று இரவு இடி மின்னலுடன் கடும் மழை கொட்டித் தீர்த்தது.

இரவு 7 மணியளவில் ஆரம்பித்த மழை 9 மணிவரையான இரண்டு மணித்தியாலங்கள் காற்றுச் சுழற்சியுடன் கொட்டித் தீர்த்தது. (ம)


## திருக்கேதீச்சரநாதர் பஞ்சரதப் பவனி

யாழ்ப்பாணம், மே 21

பல்லாயிரம் ஆண்டு வரலாற்றுப் பெருமை வாய்ந்ததும், தேவாரப் பாடல் பெற்றதுமான மன்னார் மாதோட்டம் கௌரி உடனுறை திருக்கேதீச்சரநாதர் ஆலய வருடாந்த மஹோற்சவத்தின் பஞ்சரதப் பவனி உலா இன்று செவ்வாய்க்கிழமை இடம்பெறவுள்ளது.

இன்று அதிகாலை 5 மணியளவில் அபிஷேகம் ஆரம்பமாகி அதனைத் தொடர்ந்து காலைச் சந்திப் பூசை, கொடித்தம்பப் பூசை என்பன இடம்பெறும். காலை 8 மணியளவில் வசந்தமண்டபப் பூசை வழிபாட்டைத் தொடர்ந்து பஞ்ரதப் பவனி உலா நடைபெறும்.

இதேவேளை- நாளை புதன்கிழமை காலை தீர்த்தத் திருவிழாவும், இரவு கொடியிறக்கத் திருவிழாவும் இடம்பெறும். (ம-66)



பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக அலுவலர்களுக்கான 'முரண்பாட்டு முகாமைத்துவம்' தொடர்பான பயிற்சி, பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. இதில் வளவாளர்களாக மருத்துவர் க.ரஞ்சன், மருத்துவர் டிரோணி ஆகியோர் கலந்து கொண்டனர். (ப-9)

## மரண அறிவித்தல்

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ



தோற்றம் 03.09.1948 — இறப்பு 19.05.2024

### வடிவேலு இராசம்மா (செல்லம்)

மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும், உடுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட வடிவேலு இராசம்மா நேற்றுமுன்தினம் (19.05.2024) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்தையா - எள்ளுப்பிள்ளை தம்பதியரின் கனிஷ்ட புத்திரியும், உடுவிலைச் சேர்ந்த காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை - பாக்கியத்தின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை வடிவேலுவின் அன்பு மனைவியும், கௌரி, சிறீதரன் (சிறி), கஜேந்திரன், விஜேந்திரன் (கோபி), வனஜா (France), குமரேந்திரன் (குமரன்), றஜீதா (France) ஆகியோரின் அன்புத் தாயாரும், மோகனதாஸ், றாகினி, சுபாஹறதி, ஸ்ரீமீரா, மோகனதாஸ் (France), கமலராசா (France) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான ராசம்மா, கனகநாயகம், தங்கம்மா, நாகம்மா, இராசரத்தினம் மற்றும் யோகமணியின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான மகேஸ்வரி, சுந்தரலிங்கம் (London), இரத்தினம், கனகமலர் (ஆத்தை), பாலசுப்பிரமணியம் (அப்பு) மற்றும் துரைசிங்கம், இராஜேஸ்வரி ( பாப்பா - London), நாகேஸ்வரி (ராணி), கமலாதேவி (தேவி), காலஞ்சென்ற விக்னேஸ்வரி (சோதி) மற்றும் ஜெகதீஸ்வரி (காந்தி - London) ஆகியோரின் மைத்துனியும், மதுர்சனா, ஜானுகா, காலஞ்சென்ற கிஷோத்மன் மற்றும் யதுகேசன், லிதிகேஷ், கர்ணிகா, சாகித், லிசானா, கவினாஸ், சுவர்ணி, லக்சுஜி, பிரனீத், அனிஸ்கா, விஸ்மிகா, அர்விகா, ஆதிரா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.05.2024) புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக இணுவில் பூவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும் . இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**உடுவில் காளிகோவிலடி,**
**உடுவில், சுன்னாகம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்**
077 474 9639

(CS/55131) J-1

## பெயர் மாற்றம்

மடத்தடி, சண்டிலிப்பாயைச் சேர்ந்த **சிறீதரன்** ஆகிய நான் எனது பெயரை **சிறீதிரன்** என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் **சிறீதிரன்** என்றே கையொப்பமிடுவேன் என இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு மக்களுக்கு அறியத்தருகின்றேன்.

**சிறீதிரன்**

(CS/55133) J-1

## ஆதன உரிமை மாற்ற அறிவித்தல்

வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை : பண்டத்தரிப்பு பட்டின உப அலுவலகம்
விண்ணப்பதாரரின் பெயர் : வேலாயுதம்பிள்ளை புலேந்திரன் பெண் தவச்செல்வி
சபை ஆதனவரி பதிவேட்டின்படி பெயர் : நடராசா இரத்தினசபாபதி
ஆதன இல : 126, சித்தன்கேணி வீதி, வட்டாரம் - 06

வட்டாரம் 06.சித்தன்கேணி வீதி ஆதன இல: 126 இல் அமைந்துள்ள உறுதியின் பிரகாரம் வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் வலிகாமம் மேற்கு சங்கானைக் கோவிற்பற்று சங்கானை மேற்கு இறை "பனிக்கிலாவத்தை" எனும் பெயருள்ள நிலப்பரப்பு 7, குளி 0.14 அளவெட்டி வடக்கு குறித்த இரத்தினசபாபதி மகள் விக்னேஸ்வரிக்கு பிரசித்த நொத்தாரிசு தம்பிப்பிள்ளை முகதாவில் எழுதப்பட்ட 15.01.87/6743 இலக்க நன்கொடை உறுதி மூலம் வந்தடைந்து பிரசித்த நொத்தாரிசு இளங்கோவன் முகதாவில் எழுதப்பட்ட 7574 இலக்க 18.06.2012 அறுதி உறுதிப் பிரகாரம் மலேசியாவிருந்து அற்றோனி தத்துவத்தின் மூலம் குறித்த வேலாயுதம் பிள்ளை புலேந்திரனுக்கும் பெண் தவச்செல்விக்கும் வழங்கப்பட்டுள்ளது.

**ஆதன விபரம்**

நில அளவையாளர் இராமச்சந்திரன் அவர்களால் வரையப்பட்ட 5093 ம் இலக்க 2012.05.20 திகதிய நிலஅளவைப்படத்தின் பிரகாரம் நிலப்பரப்பு 7 குளி 0.14 கொண்ட இவ் ஆதனத்தின் எல்லைகள் பின்வருமாறு

வடக்கு - சீவரத்தினம் பெண் சிவரஞ்சினியினதும் குகபாலன் பெண் இராஜேஸ்வரியினதும் ஆதனங்கள்
கிழக்கு - சித்தன்கேணி வீதி
தெற்கு - சண்முகதாசன் பெண் சுகந்தினியின் ஆதனம்
மேற்கு - பாலரூபன் பெண் வசந்தமலரின் ஆதனம்

மேற்குறித்த ஆதனத்தை வேலாயுதம்பிள்ளை புலேந்திரன் பெண் தவச்செல்வி என்ற பெயரில் ஆதன உரிமை மாற்றம் செய்வது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் இன்றிலிருந்து 30 நாட்களுக்குள் சட்டபூர்வமான ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ வெளிநாட்டில் வசிப்பவர்களாக இருந்தால் இங்குள்ள உறவினர்களூடாகவோ ஆட்சேபனையை தெரிவிக்குமாறும் ஆட்சேபனை தெரிவிக்காத பட்சத்தில் விண்ணப்பதாரரின் பெயருக்கு ஆதன உரிமை மாற்றம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் இந்த பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**செயலாளர்**
**வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை,**
**மானிப்பாய்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

தோற்றம்
20 . 12 . 1967



மறைவு
19 . 05 . 2024

**அல்பிரட் அன்ரன் ஜேக்கப் யேசுதாசன் (றஞ்சன்)**

ஈச்சமோட்டையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட அல்பிரட் அன்ரன் ஜேக்கப் யேசுதாசன் (றஞ்சன்) அவர்கள் நேற்று முன்தினம் (19.05.2024) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அல்பிரட் (சிங்கராஜா) மற்றும் அந்தோணியாப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மகனும், வேலாயுதம் மற்றும் காலஞ்சென்ற புஸ்பவதி தம்பதியரின் மருமகனும், சாந்தகுமாரியின் பாசமிகு கணவரும், டோன் (மாணவன், பத்தரிசியார் கல்லூரி), சோபியா (மாணவி, சுண்டிக்குளி மகளிர் கல்லூரி), ரேகன் (மாணவன், பத்தரிசியார் கல்லூரி), சசிந்தன் (மாணவன், பத்தரிசியார் கல்லூரி), ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற ரஞ்சினி மற்றும் ராஜினி (கனடா), வதனி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், துஷான், ஜனவி ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (22.05.2024) புதன்கிழமை பிற்பகல் 03.00 மணியளவில் கொய்யாத்தோட்டம் கிறிஸ்து அரசர் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி

**077 400 3334**



கோப்பாய்ப் பிரதேச செயலக உத்தியோகத்தர்களுக்கான, தொற்றாநோய் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வு, பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் கடந்த புதன்கிழமை இடம்பெற்றது. நிகழ்வில் அரச மூலிகைத் தோட்டம் மற்றும் சித்த மத்திய மருந்தகத்தின் மருத்துவப் பொறுப்பதிகாரி சிவகுலேந்திரா வளவாளராகக் கலந்துகொண்டார். (ப-66)

## மோ.சைக்கிள் விபத்து: குடும்பத்தலைவர் பலி!



யாழ்ப்பாணம், மே 21

வேகக்கட்டுப்பாட்டை இழந்த மோட்டார்சைக்கிள் மின்கம்பத்துடன் மோதிவிபத்துக்குள்ளானதில், குடும்பத்தலைவர் உயிரிழந்தார்.

குறித்த சம்பவம் நேற்றுத் திங்கட்கிழமை மாலை அளவெட்டியில் நடந்துள்ளது. சம்பவத்தில் அளவெட்டிப் பகுதியைச் சேர்ந்த தியாகராஜா தயானன் (வயது-36) என்ற நபரே உயிரிழந்தவராவார். சம்பவம் தொடர்பாகத் தெல்லிப்பழைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-66)

**காணியும் வீடும் விற்பனைக்கு**



யாழ்ப்பாணம் மருதடி வீதியில் அமைந்துள்ள
நிலப்பரப்பு ( 2 3/4 ) இரண்டே முக்கால்
விஸ்தீரணமுடைய காணியும் அதிலுள்ள
(2) இரண்டு வீடுகளும் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:- 077 430 6616
077 678 2174

(CS/55132) J-1

## இலங்கையில் இன்று துக்கம்

கொழும்பு,மே21

ஈரான் ஜனாதிபதியின் மரணத்துக்காக இன்று தேசிய துக்கதினம் கடைப்பிடிக்கப்படும் என்று இலங்கை அரசாங்கம் அறிவித்துள்ளது. (ம)

"ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நமஹ"

# 37 ஆவது பிறந்ததின நினைவலைகள்

அமரர்
## அன்னலிங்கம் கிரிசாத் (மிறாஜ்)



பிறப்பு
21.05.1987

இறப்பு
14.10.2022

அகவை முப்பத்தேழு ஆனது ஐயா
மாநிலத்தில் நீ பிறந்து!

பிறப்பு என்பது இயற்கையின் நியதி
இறப்பு என்ன விதிவிலக்கா? இருந்தும்
இத்தனை விரைவில் வருவது
இறைவன் செய்த சதிக்கணக்கா?


நீ மறைந்த நாள் முதலாய்
நிம்மதி எமக்கு இல்லை
நினைவிழந்து செயலிழந்து
நிர்க்கதியாய் நிற்கின்றோம் ஐயா!

தேற்றுவார் இல்லாமல்
தேம்பி அழுகின்றோம் ஐயா!
உன் திருமுகம் பார்க்காமல்
ஏங்கித் தவிக்கின்றோம்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி!

சிவன் வீதி,
திருநெல்வேலி.
குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அனலைதீவு மனோன்மணி அம்பாள் கோவில் திருவிழா கொடியேற்றத்துடன் கடந்த செவ்வாய்க்கிழமை ஆரம்பமானது. தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறும் திருவிழாவில் நாளை 22 ஆம் திகதி புதன்கிழமை தேர்த்திருவிழாவும், மறுநாள் வியாழக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (எ-9)



வலிகாமம் கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளுக்கு இடையிலான 18 வயதுப் பெண்கள் அணியினருக்கான மேசைப்பந்தாட்டப் போட்டியில் மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயம் முதலிடம் பெற்றுச் சம்பியனானது. இரண்டாமிடத்தை அராலி சரஸ்வதி இந்துக் கல்லூரியும் மூன்றாமிடத்தை வட்டு. யாழ்ப்பாணக் கல்லூரியும் பெற்றுக் கொண்டன. (ச-555)



கோப்பாய் மத்தி கிராம அபிவிருத்திச் சங்கம், கேள்வர் நாம் குழுமம் மற்றும் மகிந்தனின் நண்பர்கள் இணைந்து, அமரர் மகிந்தனின் 2 ஆவது ஆண்டு நினைவாக முன்னெடுத்த குருதிக்கொடை முகாம் நிகழ்வு, கோப்பாய் சரவணந்தா பாடசாலை அருகாமையிலுள்ள மாதர் சங்க மண்டபத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. (ப-66)

விற்பனைக்கு
கடைக்கேற்றுக்கள் 5
காணிக்கேற் 2
நிலை, கதவுகள், கிறில், கட்டட இடிபாடுகள், 03 கடைக்கட்டடம், மேல்மாடிக் கட்டட வீடு, ஒரு தனிவீடு முதலியன உடன் விற்பனைக்குண்டு.
077 723 2535

## மரண அறிவித்தல்



### திரு. சின்னத்தம்பி ஜெயரூபன்

**(பிரதி அதிபர் யா/ வீமன்காமம் மகாவித்தியாலயம்)**

சாயுடை மாவிட்டபுரத்தை பிறப்பிடமாகவும் இணுவில் மேற்கை வதிவிடமாகவும் கொண்ட திரு. சின்னத்தம்பி ஜெயரூபன் (19.05.2024) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் சின்னத்தம்பி இராசமணி தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வனும் காலஞ்சென்ற பஞ்சலிங்கம் புனிதவதியின் மருமகனும், விஜயகுமாரியின் (ஆசிரியை யா/இராமநாதன் கல்லூரி) அன்புக் கணவரும் மதுராங்கியின் பாசமிகு தந்தையும் ஹரிகரனின் மாமனாரும் ஜெயவதனா, ஜெயமணி, ஜெயகாந்தன் ஜெயந்தினி, ஜெயநந்தன்,ஜெயசொரூபி ஆகியோரின் சகோதரனும் விக்கினேஸ்வரன், மாலினி, சியாமளா, ஷாலினி, தயந்தினி, கணேசமூர்த்தி, தனபாலு, சுதா, சுரேஸ்குமார், குணவதி, கஜன் ஆகியோரின் மைத்துனரும் இராஜேஸ்வரி சின்னையாவின் பெறாமகனும் வள்ளிப்பிள்ளை மூத்தபிள்ளை ஆகியோரின் மருமகனும் சுகுமாரன் ஜெயந்தினி தம்பதிகளின் சம்பந்தியும் ரஞ்சினிதேவி விக்கினேஸ்வரன் நவீனச்சந்திரன் சிவேந்திரன் சுபாஸ்கரன் ஆகியோரின் சகலனும் ஹரிஷான் விதுயனன், விதுசன், நிரேகா, வர்சனா, அக்சயன், அகல்யன் மானுஷா சானுஷா பாதுஷா யதுஷா அபிநயா, ஆரபி, இல[illegible]ன் ஆகியோரின் பெரிய தந்தையும் சுபத்திரா பிரியங்கன் சாரங்கன், சஞ்சய[illegible]ன் ச[illegible]கவி துவாரகன் யந்துஷா, மேதுஷா, ஜரூவ், யுத்துமா, விதுன், அக்சயா, அபி[illegible]ா ஆகியோரின் மாமனுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் (22.05.2024) புதன்கிழமை பிற்பகல் 01.30 மணியளவில் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரிகைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.


இவ் அறிவித்தலை உற்றார், உ[illegible]ர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கு[illegible]ம்பத்தினர்.
ஸ்ரீ[illegible]

076 664 4237
077 374 7879

## மரண அறிவித்தல்

தோற்றம் 13 . 02 . 1938



மறைவு 18 . 05 . 2024

### சின்னத்தம்பி ஆறுமுகம் (அப்புத்துரை)

**(ஓய்வுபெற்ற தபால் உத்தியோகத்தர், காங்கேசன்துறை)**

காங்கேசன்துறை, தையிட்டியைப் பிறப்பிடமாகவும், கீரிமலை வீதி, பண்டத்தரிப்பை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி ஆறுமுகம் (அப்புத்துரை) அவர்கள் கடந்த 18.05.2024 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - நாகம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான தம்பையா - அன்னபூரணம் தம்பதியரின் அன்பு மருமகனும், இராசமலர் அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை, அருணாசலம், கந்தையா, சுப்பிரமணியம், கந்தையா சின்னையா ஆகியோரின் அன்புச் சகோதரனும், கெங்காதரன் (பிரான்ஸ்), சுபத்திரா (பிரான்ஸ்), வினோதரன் (உள்ளூராட்சித் திணைக்களம், வடமாகாணம்), சசிதரன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், லலிதாவதி, சிற்றம்பலம், நிமாலினி, திருமுனா ஆகியோரின் பாசமிகு மாமனாரும், மதுமிதா, ஆதரன், ஜெனந்தன், ஆதர்சன், ஐசானி, தினுஷா, மோகனவர்சன், றஸ்மிகா, ராகேஷ், ஜஸ்மிலன் ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.05.2024) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக விளாவெளி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொ.பே: 077 247 8344
076 795 7948 (W.App)

(CS 00546) S-1

தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சர்வதேச....

முள்ளிவாய்க்கால் நினைவேந்தலில் கலந்துகொண்ட பின்னர் 'தமிழ் கார்டியன்' ஊடகத்துக்கு வழங்கிய நேர்காணலில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-
சர்வதேச சமூகம் இலங்கை விவகாரத்தை ஐ.நா. பாதுகாப்புச்சபைக்கும், சர்வதேச நீதிமன்றத்துக்கும் கொண்டு செல்லவேண்டும். முதலில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக்கு இலங்கை விவகாரத்தை எடுத்துச்செல்லவேண்டும். அடுத்து நாடுகளும், அரசாங்கங்களும் ஐ.நா. பாதுகாப்புச் சபைக்கு எடுத்துச்செல்லவேண்டும், ஐ.நா. பாதுகாப்புச் சபை சர்வதேச குற்றவியல் நீதிமன்ற விசாரணையை கோரவேண்டும். இலங்கையில் போர்க் குற்றங்களில் ஈடுபட்டவர்கள் வெளிநாடு செல்லும் போது அவர்களுக்கு எதிராக சர்வதேச ரீதியில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும். உலகளாவிய நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்கவேண்டும்.
முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் மிகவும் உணர்ச்சிகரமானதாக இருந்தது. காணாமல் ஆக்கப்பட்டவர்களின் தாய்மார்கள் தமது அனுபவங்களையும், அவர்களின் வேதனைகள், அவர்களின் அச்சங்கள் மற்றும் அவர்கள் எதிர்கொள்ளும் அடக்குமுறைகள் குறித்தும் பேசினார்கள். தங்கள் அன்புக்குரியவர்களுக்கு என்ன நடந்தது என்று தெரியாமல் அவர்கள் ஏங்குகின்றனர். அவர்களின் முகத்தில் கோபமும், ஆத்திரமும் வெளிப்பட்டது - என்றார். (அ-ம-6)

## ஹெலிகொப்டர்...

விபத்தில் உயிரிழந்துவிட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளதுடன், அவரின் ஜனஸாவும் மீட்கப்பட்டுள்ளது.
அஸர்பைஜானுக்குப் பயணம் மேற்கொண்டிருந்த ஈரான் ஜனாதிபதி, தனது பாதுகாப்புப் படையினர் புடைசூழ ஜல்பா நகர் வழியாக ஹெலிகொப்டரில் திரும்பிக் கொண்டிருந்தபோதே மோசமான காலநிலை காரணமாக மலைப்பகுதியுடன் மோதி இந்த விபத்து நேர்ந்துள்ளது. சுமார் 10 மணிநேர நடவடிக்கைகளின் பின்னர் நேற்று நண்பகல் (இலங்கை நேரப்படி) ஜனாதிபதியின் உடலம் மீட்கப்பட்டதாக மீட்புக் குழுவினர் அறிவித்துள்ளனர்.
ஈரானின் வெளியுறவு அமைச்சர் ஹுசைன் அமிர் அப்துல்லாயன், கிழக்கு அஸர்பைஜான் ஆளுநர் மலேக் ரஹ்மானி, கிழக்கு அஸர்பைஜானின் வெள்ளிக்கிழமை பிரார்த்தனைக்கான இமாம் முகமது அலி அலே ஹஷேம் உள்ளிட்ட முக்கியஸ்தர்களும் விபத்தில் உயிரிழந்துள்ளனர். (அ-ம)

## போர்க்குற்றவாளிகளைத்...

பெற்றுக்கொடுக்கத்தவறி விட்டனர்- என இலங்கை விஜயத்தை முடித்துக் கொண்டு திரும்பிய சர்வதேச மன்னிப்புச்சபையின் செயலாளர் நாயகம் அக்னஸ் கால்மார்ட் தெரிவித்துள்ளார். இலங்கை விஜயம் தொடர்பாக வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-
பல்லாயிரக்கணக்கான மக்களை காயப்படுத்திய, பலியெடுத்த , இடம் பெயரவைத்த , பலவந்தமாக காணாமல் போகச்செய்த மூன்று தசாப்தகால உள்நாட்டு ஆயுதப்போர் முடிவடைந்து 15 வருடங்களைக் குறிக்கும் இலங்கைக்கு இது ஒரு குறிப்பிடத்தக்க ஆண்டாகும். ஆனால், இலங்கையில் பாதிக்கப்பட்டவர்களையும் மக்களையும் தோல்வியடையச்செய்தது அடுத்தடுத்த அரசாங்கங்கள் மட்டுமல்ல, தேர்ந்தெடுக்கப்பட்ட அதிகாரிகள் முதல் எதிர்க்கட்சித் தலைவர்கள், மத ஸ்தாபனங்கள் மற்றும் தேசிய ஊடகங்கள் வரை தலைமைப் பதவிகளில் இருப்பவர்கள் தண்டனையின்மைக்கு எதிரான போராட்டத்தை நிலைநிறுத்தத் தவறிவிட்டனர்.
எதிர்வரும் மாதங்களில் நடைபெறவுள்ள தேர்தல்கள் இலங்கையின் எதிர்காலம் மற்றும் மனித உரிமைகள் பரிசீலனைகள் ஆகியவற்றில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும். நாட்டின் அரசியல் தலைமையானது நம்பிக்கையைக் கட்டியெழுப்பும் நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்த வேண்டும், அது பிளவுகளை நிவர்த்தி செய்யும், இனங்களுக்கிடையிலான ஒற்றுமையை ஊக்குவிக்கும் மற்றும் அர்த்தமுள்ள பரிகாரங்களை வழங்கும். கடந்த காலத் தவறுகளை நிவர்த்தி செய்வது அவசியம். ஒரு புதிய உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை ஸ்தாபிப்பதை அரசாங்கம் பரிசீலிக்க வேண்டும். போரின் போதும் அதன் பின்னரும் நடந்து கொண்டிருக்கும் மனித உரிமை மீறல்களால் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் உண்மை மற்றும் நீதியைப் பாதுகாப்பதற்கும், சுதந்திரமான மற்றும் நியாயமான இலங்கைக்கான அடித்தளத்தை அமைப்பதற்கும் சர்வதேச சமூகம் முன்வரவேண்டும்" - என்றுள்ளது . (அ-6)

## ஈரானின்...

விக்கப்பட்டுள்ளார்.
ஈரானின் மூத்த மதத்தலைவரான அயத்துல்லா அல் கொமெனிக்கு நெருக்கமானவராகவும், ஈரானின் அரசியல் மற்றும் பொருளாதாரம் தொடர்பில் ஆழமான புரிதல் மற்றும் அறிவைக் கொண்டவராகவும் மொக்பர் அறியப்படுகின்றார். இஸ்ரேலுக்கு எதிரான போரியல் நடவடிக்கைகள், ஈரானிய நாடாளுமன்றில் இஸ்ரேலுக்கு எதிராக முன்னெடுக்கப்படும் நகர்வுகள் என்பனவற்றில் தீவிரமான தலையீட்டைக் கொண்டவராகவும் மொக்பர் குறிப்பிடப்படுகின்றார். (அ-ம)

## இராணுவ...

ழந்துள்ளார். யுவதியின் பிறந்ததினமான நேற்று இந்த விபத்துச் சம்பவம் நடந்துள்ளது.
புத்தூர், வாதரவத்தையைச் சேர்ந்த சுதாகரன் சாருஜா (வயது-23) என்ற யுவதியே இவ்வாறு உயிரிழந்துள்ளார். அவரது பிறந்ததினமான நேற்று சைக்கிளில் பெரியதந்தையின் வீட்டுக்குச் சென்றுவிட்டுத் தனது வீட்டுக்குத் திரும்பும்போதே விபத்து நடந்துள்ளது.
புத்தூர் மீசாலை வீதியில் வீரவாணிச் சந்திப் பகுதியில் வீதியைக் கடப்பதற்காக வீதியோரம் யுவதி நின்றுள்ளார். இராணுவ வாகனம் ஒன்று அவர் நின்ற திசைக்கு எதிர்த்திசையில் புத்தூர் சந்தியில் இருந்து வந்துள்ளது. வீதியின் இடதுபுறமாக வந்த இராணுவ வாகனம் வலது புறத்தில் வீதியைக் கடக்கக் காத்திருந்த யுவதி மீது மோதி, பின்னர் அங்கிருந்த மரம் ஒன்றுடன் மோதி கவிழ்ந்துள்ளது.
விபத்தில் படுகாயமடைந்த யுவதி மருத்துவமனைக்குக்கொண்டு செல்லும் வழியிலேயே உயிரிழந்துள்ளார். இறப்பு விசாரணைகளை வலிகாமம் கிழக்கு திடீர் மரணவிசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். (அ.எ-26-23-125-66)

## முள்ளிவாய்க்காலில்...

வர்களை நினைவுகூரும்வரை அரசு மௌனம் காத்தமை அதன் கையாலாகத்தனத்தையே வெளிப்படுத்துகின்றது - என்று நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்தார்.
கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-
"போரில் உயிரிழந்தவர்களை நினைவு கூருவதற்கு அவர்களின் உறவுகள் மற்றும் நண்பர்களுக்கு இருக்கும் உரிமையை நாம் நிராகரிக்கவில்லை. ஆனால் கொடூரமான பயங்கரவாதிகளை நினைவுகூருவதற்கு உலகில். எங்கும் அனுமதி கிடையாது.
நீதிமன்றத்தால் தடைவிதிக்கப்பட்டிருந்த நிலையிலும் வடக்கு, கிழக்கு மற்றும் கொழும்பில் பயங்கரவாதிகள் நினைவுகூரப்பட்டுள்ளனர். அதற்கான நிகழ்வுகள் நடத்தப்பட்டுள்ளன.
இதனைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்காத அரசு, இதற்கு எதிராகச் செயற்பட்டவர்களைக் கைதுசெய்து தனது இயலாமையை வெளிப்படுத்தியுள்ளது.
புலிகளை நினைவுகூருவதற்கு நாட்டில் நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்படும்போது அது தொடர்பில் மௌனம்காத்த பிரதமர், 'போர் வீரர்களை' நினைவுகூரும் தேசிய நிகழ்வில் பிரதம அதிதியாக பங்கேற்பது வெட்கப்பட வேண்டிய விடயமாகும்.
வெள்ளமுள்ளிவாய்க்காலில் நடைபெற்ற புலிகளுக்கான நினைவேந்தல் நிகழ்வில் சர்வதேச மன்னிப்புச் சபையின் செயலாளர் பங்கேற்றுள்ளார். வெளிநாட்டவர் இங்கு வந்து, இராணுவத்தினரை, அப்பாவி மக்களை கொன்ற பயங்கரவாதிகளை நினைவு கூரும்வரை அரசு அமைதி காத்துள்ளது. சர்வதேச மன்னிப்புச் சபையின் செயலாளருக்கு இலங்கையில் மட்டுமே தனது விளையாட்டைக் காட்ட முடிந்துள்ளது, இந்தியா, அமெரிக்கா ஆகிய நாடுகளுக்கு சென்று பயங்கரவாதிகளை நினைவுகூர முடியுமா? ஏன் மன்னிப்புச் சபையின் செயலாளரின் தாய் நாடான பிரான்ஸுக்குச் சென்று அதனைச் செய்யமுடியுமா? ஏனெனில் அவ்வாறு செய்ய முற்பட்டால் அந்த நாட்டு அரசும், தேசப்பற்றுள்ள மக்களும் அதனைத் தடுத்து நிறுத்திவிடுவார்கள்" - என்றார். (அ-ம-44)

## வற்றாப்பளை...

றுத் திங்கட்கிழமை கொட்டும் மழைக்குமத்தியிலும் லட்சக்கணக்கான அடியவர்களின் பங்கேற்புடன் வெகுசிறப்பாக நடைபெற்றது.
வைகாசி விசாகப் பொங்கல் உற்சவத்தை முன்னிட்டு கண்ணகி அம்மனுக்கு சிறப்பு வழிபாடுகள் இடம்பெற்றதுடன் ஆலயச் சூழலில் நேற்று அதிகாலை முதல் ஆயிரக்கணக்கான அடியவர்கள் பொங்கல் பொங்கி வழிபாடுகளை மேற்கொண்டனர். அத்துடன் ஆண், பெண் அடியவர்கள் பல வகையான காவடிகளை எடுத்துத் தமது நேர்த்திக் கடன்களை நிறைவேற்றினர்.
இதேவேளை, முல்லைத்தீவு மக்கள் மாத்திரமன்றி வெளி மாவட்டங்கள் மற்றும் புலம்பெயர் தேசங்களைச் சேர்ந்த அதிகளவான அடியவர்கள் இம்முறை வற்றாப்பளைக் கண்ணகி அம்மனின் வைகாசி விசாகப்பொங்கல் உற்சவத்தில் கலந்து கொண்டிருந்ததுடன் ஆலயச் சூழல் விழாக்கோலம் பூண்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (அ-ம-66-113)

## இலங்கை....

இலங்கை 100 இடங்களுக்குள் முன்னேறியுள்ளது. இதன்படி இலங்கைக்கு 96 ஆவது இடம் கிடைத்துள்ளது.
ஹென்லி நிறுவனம் 199 நாடுகளின் கடவுச்சீட்டுக்களை உள்ளடக்கி இந்த ஆய்வை நடத்தியது. நுழைவிசைவு இல்லா இலகு அணுகல்களை பிரதானமாகக் கருத்திற்கொண்டு இந்த ஆய்வு நடத்தப்பட்டுள்ளது. இதில் இலங்கை 96ஆவது இடத்தைப் பிடித்துள்ளது. தெற்காசிய நாடுகளில் இந்தியா 80 ஆவது இடத்திலும், பாகிஸ்தான் 101 ஆவது இடத்திலும், பங்களாதேஷ் 97 ஆவது இடத்திலும், நேபாளம் 98 ஆவது இடத்திலும் உள்ளன.
பிரான்ஸ், ஜேர்மனி, ஸ்பெய்ன், ஜப்பான், தென்கொரியா ஆகிய நாடுகள் முதலிடத்தைப் பகிர்ந்துகொண்டுள்ளன. (அ-ம-6)

## உழவியந்திரம்...

திரம் வேகக்கட்டுப்பாட்டை இழந்து தடம்புரண்டதில் 16 வயதுச் சிறுவன் ஒருவன் உயிரிழந்துள்ளான்.
புதுக்குடியிருப்பு, மூங்கிலாறு பகுதியில் நேற்றுமாலை 5.50 மணியளவில் இடம்பெற்ற இந்த விபத்தில் , தருமபுரம், உழவனூர் பகுதியை சேர்ந்த ரவிச்சந்திரன் மிதுசிகன் (வயது-16) என்ற சிறுவனே உயிரிழந்துள்ளான்.
இந்த விபத்தில் உழவியந்திரத்தில் பயணித்த மேலும் 6 பேர் படுகாயங்களுடன் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். அவர்களில் ஒருவர் ஆபத்தான நிலையில் இருப்பதாக மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன. (அ-113,19)

## நான்கு....

புதுடில்லி, மே 21
ஐ.எஸ்.ஐ.எஸ். பயங்கரவாதிகள் என்ற சந்தேகத்தில் நான்கு இலங்கையர்கள் இந்தியாவில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளனர். அகமதாபாத்திலுள்ள சர்தார் வல்லபாய் படேல் சர்வதேச விமான நிலையத்தில் வைத்து அவர்கள் நால்வரும் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று குஜராத் தீவிரவாத தடுப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.
குஜராத் தீவிரவாத தடுப்புப் பிரிவு தீவிர விசாரணைக்காக சந்தேகநபர்களை அழைத்துச் சென்றுள்ளது. அகமதாபாத் விமான நிலையத்துக்கு குறித்த நால்வரும் ஏன் வந்தார்கள்? என்பதற்கான துல்லியமான காரணம் இதுவரை தெளிவாகத் தெரியவில்லை. இதனால் அந்த விமான நிலையம் முழுவதும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.
இந்தியாவில் ஐ.பி.எல். போட்டிகள் இடம்பெறுவதால் தகுதிச் சுற்று மற்றும் எலிமினேட்டர் ஆட்டங்களுக்காக மூன்று அணிகள், அகமதாபாத் விமான நிலையத்துக்கு வருவதற்கு சிறிது நேரத்திற்கு முன்னதாக குறித்த நால்வரும் கைதுசெய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சர்வதேச 'ரோலர் நெட்டெட் போல்' விளையாட்டுப் போட்டிகள் கம்பஹா விமானநிலைய விளையாட்டு மைதானத்தில் அண்மையில் இடம்பெற்றது. இதில் இலங்கை அணி சார்பாக பங்குபற்றிச் சம்பியன் பட்டத்தை வென்ற மன்னார் மாவட்ட வீர, வீராங்கனைகளைப் பாராட்டும் நிகழ்வு, மன்னார் புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி தேசியப் பாடசாலையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. (எ-25-56)

வங்கி மீதி வசதிகள் மற்றும் விசா ஆலோசனை
சகல நாடுகளுக்குமான விசா ஆலோசனை மற்றும் வங்கி மீதி (Show Money) வசதிகள்
தொடர்புகளுக்கு: (CS/55110) J-1
074 173 7684

## வேலைவாய்ப்பு

யாழ். நகரில் இயங்கிவரும் எமது நிறுவனத்திற்கு கீழ்வரும் வெற்றிடத்திற்கு விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப் படுகின்றன.

1. ஒப்புநோக்குநர் (பகல், இரவு)

நேரில் சமுகம்தரவும்.
காலம்: 21.05.2024 (செவ்வாய்க்கிழமை)
22.05.2024 (புதன்கிழமை)
நேரம்: காலை 9.00 - 2.00 மணிவரை.
மாலை 6.00 - 8.00 மணிவரை.

உதயன் பணிமனை
இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## நூல் வெளியீடு

சுன்னாகம், மே 21

'நீரிழிவு முகாமையில் உணவு, உள்ளம், உடற்பயிற்சி' எனும் நூல் வெளியீட்டு நிகழ்வு, யாழ் சித்த மருத்துவமனையில்நாமைறுநாள்வியாழக்கிழமை பி.ப. 3.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

சித்த மருத்துவ நிபுணர் வெ.ஜெகதீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில், உடுவில் பிரதேச செயலக கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆ.கோகுலன், கைதடி சித்த போதனா மருத்துவமனை மருத்துவ பொறுப்பதிகாரி திருமதி சியாமா துரைரட்ணம் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ப)

## சைக்கிள் திருட்டு

யாழ்ப்பாணம், மே 21

சங்கானையிலுள்ள வீடொன்றினுள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சைக்கிள் ஒன்று திருட்டுப் போயுள்ளதாகத் தெரிவித்து, மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்று பதிவு செய்யப்பட்டுள்ளது.

சங்கை விழி சுட்டிப் பகுதியில், கடந்த வெள்ளிக்கிழமை, வீட்டில் யாருமற்ற நிலையிலேயே இவ்வாறு சைக்கிள் திருட்டு இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். இதுதொடர்பான மேலதிக விசாரணைகளை மானிப்பாய் பொலிஸார் முன்னெடுத்துவருகின்றனர். (ப-125)

## வருடாந்த விளையாட்டு விழா

யாழ்ப்பாணம், மே 21

காரைநகர் பிரதேச செயலகத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான வருடாந்த விளையாட்டு விழா, காரைநகர் இந்துக் கல்லூரி மைதானத்தில் இன்று செவ்வாய்க்கிழமை பி.ப. 2.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

காரைநகர் பிரதேச செயலாளர் ந.ரஞ்சனா தலைமையில் இடம்பெறவுள்ள நிகழ்வில் யாழ்.மாவட்டப் பதில் செயலர் ம.பிரதீபன் பிரதம விருந்தினராகவும், ஊர்காவற்றுறைப் பிரதேச செயலாளர் திருமதி ச.மஞ்சுளாதேவி, வேலணைப் பிரதேச செயலாளர் க.சிவகரன், சங்கானைப் பிரதேச செயலாளர் திருமதி உ.கவிதா ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொள்ளவுள்ளனர். (ப-66)

## பொதுக்கூட்டம்

கீரிமலை, மே 21

ஸ்ரீ மகா முத்துமாரி அம்பாள் ஆலய புனருத்தாரணசபைப் பொதுக்கூட்டம், ஆலய முன்றிலில் எதிர்வரும் 30 ஆம் திகதி வியாழக்கிழமை மு.ப. 10 மணிக்கு நடைபெறவுள்ளது.


பக்தர்கள், அடியார்கள், திருவிழா உபயகாரர்கள், நலன்விரும்பிகள் அனைவரும் கலந்துகொண்டு ஆலயம் சிறப்புற இயங்குவதற்கு தமது அபிப்பிராயங்களையும் கருத்துகளையும் தெரிவிக்குமாறு ஆலய புனருத்தாரணசபைத் தலைவர் கேட்டுள்ளார். (ப-6)

ஜேர்மன் செப்பேர்ட் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு
பூச்சி மருந்து கொடுக்கப்பட்ட, ஒரு ஊசி போடப்பட்ட 58 நாட்கள் வயதுடைய ஜேர்மன் செப்பேர்ட் இன நாய்க்குட்டிகள் (ஆண்/பெண்) விற்பனைக்கு உண்டு.
விலை:20,000/- இடம்:கோப்பாய்
076 200 1700

வீடு வாடகைக்கு
சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு.
இடம் :- இராசவீதி,கோப்பாய், கிறசர் ஒழுங்கை.
(CS/55129) J-1
தொடர்பு:- 077 920 7348

## மரண அறிவித்தல்

தோற்றம் 12 . 11 . 1951



மறைவு 18 . 05 . 2024

### சூசைப்பிள்ளை ஸ்ரனிஸ்லஸ்

(இளைப்பாறிய லிகிதர், யாழ்.மாநகர சபை)

யாழ்ப்பாணம் இராஜேந்திரா வீதியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சூசைப்பிள்ளை ஸ்ரனிஸ்லஸ் அவர்கள் கடந்த 18.05.2024 சனிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சூசைப்பிள்ளை - நேசம்மா தம்பதியரின் பாசமிகு மகனும், ஜோன் இராசையா - மார்த்தீனம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், பத்மராணியின் (இளைப்பாறிய தாதிய உத்தியோகத்தர், யாழ்.போதனா வைத்தியசாலை) அன்புக் கணவரும், காலஞ்சென்ற பிரியன்ஜித் மற்றும் டிலோஷினி (பிரான்ஸ்), லெய்ஷினி (இலங்கை வங்கி, வடமாகாணக் காரியாலயம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், ரஞ்சித்நிமால் (பிரான்ஸ்), சுதாஸ் (சுமன் - கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், செவறின், எமா, எல்றினா, ஷெர்வின், ஸ்ரெவோன், ஸ்ரெகான் ஆகியோரின் பாசமிகு பேரனும், ஸ்ரெலா, காலஞ்சென்ற பெலிசிற்றா மற்றும் யசிந்தா ஆகியோரின் அருமைச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான தங்கராணி, புஸ்பராணி மற்றும் போதகர் ஜெயசீலன் (எபநேசர் ஜெப ஆலயம், வட்டுக்கோட்டை), ஜெயராணி, எஸ்தர்ராணி, இந்திராணி, அரியசீலன், அமிர்தராணி, காலஞ்சென்றவர்களான ஞானப்பிரகாசம், தோமஸ் மற்றும் அகஸ்ரீன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (22.05.2024) புதன்கிழமை பிற்பகல் 03.00 மணியளவில் யாழ் பேராலயத்திற்கு திருப்பலிக்காக எடுத்துச்செல்லப்பட்டு, பின்னர் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.40, இராஜேந்திரா வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 00544) S-1



சர்வதேச உயர் இரத்த அழுத்த தினத்தை முன்னிட்டு, இரத்த அழுத்தம் தொடர்பான விழிப்புணர்வுச் செயலமர்வு, யாழ்.மாவட்டத் தொற்றாநோய் மருத்துவர்களால் நல்லூர்ப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடத்தப்பட்டது. (ப-66)

விற்பனைப் பிரதிநிதி தேவை
➤ முன்னணி FMCG நிறுவனம் ஒன்றிற்கு யாழ். மாவட்டத்திற்கு விற்பனைப் பிரதிநிதி தேவை.
➤ ஊதியம் 100,000/- இற்கு மேல் ஈட்ட முடியும்.
➤ முன் அனுபவம் உள்ளவர்கள்
jaytwoenthree@gmail.com என்னும் மின்னஞ்சல் முகவரிக்கு சுய விபரக் கோவையை அனுப்பி வைக்கவும்.
(CS/55138) J-1



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 21.05. 2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.